பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 05 புதன்கிழமை 18.03.2020 | கதிர் 133

**இனி அது ரகசியம் அல்ல!**

இப்போது அரசியலில் பல விடயங்கள் 'டீல்'தான்!

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உட்படப் பிற தமிழ்க் கட்சியினர் விடுதலைப் புலிகளால் சுடப்பட்ட காலத்தில், அதை முடி

பக்கம் 02 »

# அம்பிகாவுக்கு பதிலாக ஆனல்ட்!



## முடிவுக்கு வந்த தமிழரசுவின் இழுபறி

யாழ்ப்பாணம், மார்ச் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவில் இருந்து வந்த இழுபறி நிலை நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தமிழரசுவின் சார்பில் வேட்பாளராகக் களமிறக்குவதற்கு முடிவாகியிருந்த அம்பிகா சற்குணநாதன் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் நேற்று நண்பகல் வேட்புமனுவில் கைச்சாத்திட்டார்.

கொழும்பில் இருந்து மானிப்பாய் தொகுதியில் களமிறக்கத் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

பக்கம் 02 »

## மார்ச் 10 இக்கு முன் நாட்டுக்கு வந்த 2,000 பேர் தொடர்பில் சிக்கல் நிலை

### ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 18

கொரோனா வைரஸ் பரம் பலை நாட்டில் கட்டுப்படுத்தும் எமக்கு தற்போது காணப்படும் அடிப்படைப் பிரச்சினை என்னவெனில் மார்ச் மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக் கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு முன்னர் இரண்டு வாரங்களுக்குள் நோய்த் தொற்று ஏற்பட்டி ருந்த நாடுகளிலிருந்து 2 ஆயி ரம் பேரளவில் இலங் கைக்கு வருகை தந்திருந்தமையா கும். அவர்கள் அனைவரையும் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களை இனங்கண்டு அவர்களின் வீடுகளிலேயே கண்கா ணிப் புக்குட்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

பக்கம் 03 »

## தமிழரசு யாழ். வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையொப்பம்



யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையொப்பமிட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலை

பக்கம் 02 »

## யாழ். சிறைச்சாலை கைதிகளை இரு வாரங்கள் பார்வையிட தடை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை இன்று முதல் இரண்டு வாரங்களுக்குப் பார்வையிட முடியாது என சிறைச்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

பக்கம் 02 »

## யானைச் சின்னத்தில் யாழில் விஜயகலா



ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் முன்னாள் கல்வி இராஜங்க அமைச்சரும் மாவட்ட அமைப்பாளரு

பக்கம் 02 »

## கொரோனா பரவும் வாய்ப்புகள் அதிகம்

### எச்சரிக்கின்றார் ரணில்



கொழும்பு,மார்ச்18

பண்டிகைக் காலங்கள் நெருங்கும் நிலையில் பொதுத் தேர்தலுக்கான திகதியும் இறுதி செய்யப்பட்டுள்ளதால்

பக்கம் 02 »

## வடக்கில் தமிழ்க் கட்சிகள் இன்று வேட்புமனு தாக்கல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச்18

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை வடக்கில் போட்டியிடும் முக்கிய தமிழ்க் கட்சிகள் பலவும் இன்று புதன்கிழமை தாக்கல் செய்யவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத் துக்கான வேட்பு

பக்கம் 02 »

## 86 ரயில் சேவைகள் நேற்று முதல் ரத்து

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள 3 நாள் விசேட விடுமுறையை அடுத்து அதற்கு அமைவாக நேற்று முதல்

பக்கம் 02 »

## 3 வயதுக் குழந்தைக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் 3 வயது குழந்தையொன்றும் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளது.

தியத்தலாவ தனி

பக்கம் 02 »

## யாழ்.நகரில் பொதுமக்களுக்கு மாஸ்க் வழங்கி விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், மார்ச் 18

கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளனின் முயற்சியில் நகரில் கூடும் பயணிகளிற்கு இலவசமாக முகக் கவசம் (மாஸ்க்) வழங்கும் நிகழ்வு நேற்று ஆரம்

பக்கம் 02 »

## கொரோனாத் தொற்றுக்கு இதுவரை 43 பேர் இலக்கு!

### நேற்று மட்டும் 15 பேர் பாதிப்பு 2,250 பேர் கண்காணிப்புக்குள்

கொழும்பு,மார்ச்18

உலகத்தை அச்சுறுத்திவரும் உயிர்க்கொல்லி நோயான கொரோனா வைரஸால் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்க ளின் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள

பக்கம் 02 »

## பருப்பு, மீன் ரின் விலைக் குறைப்பு

கொழும்பு, மார்ச் 18

ஒரு கிலோ கிராம் பருப்பு 65 ரூபாவுக்கும் மீன் ரின் ஒன்று 100 ரூபாவுக்கும் நுகர்வோருக்கு வழங்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இந்த புதிய விலை நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வரும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

பக்கம் 02 »

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வக்குக் கொண்டு வந்து புலிக ளுடன் இணைக்கத்தை ஏற்ப டுத்தும் டீலில் பிறந் ததுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கொழும்பில் கூட்ட மைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சயந்தன் கூறப் போக, அது விஸ்வரூப விவகாரமாக – பூதா கரப் பிரச்சினையாக – உரு வெடுத்தமை நாம் அறிந்தது தான்.

இது இன்னொரு டீல் பற்றிய கதை. இது *'இலவச ஸ்மாட் போன் டீல்'* தொடர்பான தகவல்.

அவர் ஓர் எம்.பி. எப்படியும் தொடர்ந்து அந்தப் பதவியில் நீடிக்க வேண்டும் என்பதற்காகத் துடியாய்த் துடிப்பவர். அதற்காக அள்ளிக் கொட்டி செலவளிப் பவர். அவரின் நிர்வாக அதிகாரி அண்மையில் கொத்தாக ஸ்மாட் போன் கொள்வனவு செய்தார். ஒன்று, இரண்டல்ல. இருபது போன்கள். என்ன, எது என்று விசாரித்த போதுதான் டீல் விட யம் வெளியானது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட் டத்தில் பல்வேறு இடங்களில் பரவி இருக்கும் சுமார் இருபது பேருடன் தனித்தனி டீல். ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு ஸ்மாட்போன் இலவசம். அத் தோடு இணைய இணைப்புடன் கூடிய இலவச 'சிம்' அட்டைகளும் உண்டு.

அந்த ஸ்மாட் போனையும் 'சிம்' அட்டையையும் இலவச மாகப் பெற்றுக் கொள்வதற்கு ஒரேயொரு விடயம்தான் செய்ய வேண்டும். அந்த ஸ்மாட் போனைப் பயன்படுத்தி முகப் புத்தகத்தில் ஆகக் குறைந்தது ஐந்து தனித் தனிப் போலிக் கணக்குகளையாவது ஆரம் பிக்க வேண்டும். அதன் மூலம் சம்பந்தப்பட்ட பிரமுகரைத் துதி பாடும் வேலையை இந்தத் தேர்தல் முடியும் வரை அந்த ஐந்து அல்லது அதற்கு கூடிய முகப்புத்தகக் கணக்குகள் ஊடாக அவர்கள் ஒவ்வொரு வரும் செய்ய வேண்டும்.

அதை விசேடமாக ஆள் நிய மித்து அந்தப் பிரமுகர் கண்கா ணிப்பார். ஒவ்வொருவரும் தான்தான் தொடங்கியிருக்கும் முகப்புத்தகக் கணக்குப் பெயர்க ளைத் தெரிவிக்க வேண்டும். அதை வைத்துக் கொண்டு கண் காணிப்புப் பணி தொடரும்.

அந்தப் பிரமுகரைப் புகழ் பாடுவது மட்டுமல்ல, அவரது அணியிலேயே தேர்தலில் நிற் கும் – அவருக்குப் பிடிக்காத வர்களை – அவரை வையும் ஊடகங்களை – எல்லாவற்றை யும் போட்டுத் தாக்கும் பணி யையும் இணைய இணைப்பு டன் ஸ்மாட்போன் பெற்றவர்கள் தத்தமது முகப்புத்தகக் கணக் குகள் ஊடாக முன்னெடுக்க வேண்டும்.

அவரவரது செயல்திறனுக்கு ஏற்ப மேலதிக சன்மானம், தகுந்த வெகுமதிகள் எல்லாம் உண்டாம்.

அந்தப் பிரமுகரின் பெயரில் 'ஆமி', 'தானைப்படை' என்றெல் லாம் முகப்புத்தகக் கணக்குகள் பிறந்தமை இப்படித்தான்.

இருபது ஸ்மாட்போன்கள் மூலம் நூறு முகப்புத்தகக் கணக்குகளை ஆரம்பித்து, சமூக வலைத்தளங்களையே அதிரவைத்து, அதன் மூலம் தமக் குப் பெரும் ஆதரவுத் தளம் உள் ளது போலக் காட்டுவதுதான் திட்டம்.

ஆதரவு இருப்பது போலக் காட்டுவதற்கு எத்தனை போலித் தனங்கள், வெளிவேஷங்கள், ஆடம்பரங்கள், பணப் பட்டு வாடாக்கள், பிரசுரங்கள்...!

* * *

'அம்பிகா வெளியில்; ஆர் னோல்ட் உள்ளே!' என்ற செய்தி சுமந்திரனுக்கு வெற்றியா, தோல்வியா? இதுதான் நேற்றுக் காலைக்குப் பின்னர் தமிழர் தரப்பில் அரசியல் மெல்லுபவர் களின் வாயின் பேசுபொருள்.

அம்பிகா, ஒரேயடியாக 'அவுட்'. கூட்டமைப்பின் தேசிய பட்டியலிலும் அவருக்கு இட மில்லை.

இன்று தாக்கலாகும் கூட்ட மைப்பின் வேட்பாளர் பட்டிய லில், தேசியப் பட்டியல் நிரலில் கே.வி.தவராஜா, குலநாயகம், குருகுலராஜா ஆகியோரின் பெயர்கள் இருக்கும் எனத் தெரிகின்றது.

இம்முறையும் கூட்டமைப் புக்கு இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்தால் முதல் இடம் திருகோணமலையில் சம்பந்தன் வலது கை 'கனடா இறக்குமதி புகழ்' குகதாசனுக்கு. அதில் இரண்டாம் பேச்சுக்கு இடமில்லை.

இன்றைய களநிலைவரப் படி இரண்டாவது இடம் இலங் கைத் தமிழரசின் கொழும்புக் கிளையின் தசாப்த காலத் தலைவர் கே.வி.தவராஜாவுக்கு.

ஐந்து தமிழ்த் தேர்தல் மாவட் டங்களிலும் வாக்கு வீதத்தைக் குறைய விடாது உச்ச வாக்கு களை கூட்டமைப்பு சுவீகரித்தால் தான் இரண்டாவது தேசியபட்டி யல் ஆசனம் உறுதியாகும். கூட்டமைப்பு இதனை மறக்கா மல் இருப்பது நல்லது.

**- மின்னல் -**

### அம்பிகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்னாள் ஆணையா ளர்களில் ஒருவரான பெண் வேட்பாளர் அம்பிகா சற்குண நாதனுக்கு எதிராகத் தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியின் ஒரு தொகுதியினர் போர்க்கொடி தூக்கியிருந்தனர். இதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் பட்டிய லிலிருந்து அம்பிகாவின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. அவரைத் தேசியப் பட்டியல் மூலம் உள்வாங்கப் பரிந்துரைக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில், கூட்டமைப் பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் பட்டியலில் அம்பிகாவின் இடத் துக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் இம்மானு வேல் ஆனல்ட் உள்வாங்கப்பட் டுள்ளார். (ஐ-07)

### தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மைப் பணிமனையில் நேற்று நண்பகல் 12 மணிக்கு வேட்பு மனுவில் 5 வேட்பாளர்கள் கையொப்பமிட்டனர்.

தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், ஈ.சரவ ணபவன், த.சித்தார்த் தன், கஜதீபன், கு.சுரேன், திருமதி சசிகலா ரவிராஜ், இம்மானு வேல் ஆனல்ட் மற்றும் தபேந் திரன் ஆகியோர் வேட்பாளர்க ளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதி ராசா, எம்.ஏ. சுமந்திரன், ஈ.சரவ ணபவன், பா.கஜதீபன், தபேந் திரன் ஆகியோர் கையொப்பமிட் டனர். ஏனைய 5 பேரும் இன்று கையொப்பமிடுகின்றனர். (ஐ-07)

### வடக்கில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மனுக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் மற்றும் அங்கஜன் இராமநாதனைத் தலைமை வேட்பாளராகக் கொண்ட சிறி லங்கா சுதந்திரக் கட்சி, முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தலைமையிலான சுயேச்சைக் குழு ஆகியனவும் இன்று காலை யாழ் மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்ய வுள்ளன என அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேபோன்று வன்னித் தேர்தல் மாவட்டம் மற்றும் மட்டக் களப்பு, அம்பாறை, திருகோண மலை ஆகிய தேர்தல் மாவட் டங்களிலும் இந்தத் தமிழ்க் கட்சி கள் வேட்பு மனுக்களை இன் றையதினம் தாக்கல் செய்யவுள் ளன.

இதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நாளை வியா ழக்கிழமையே – கடைசி நாளன்றே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அதே நேரத்தில் வடக்கு – கிழக்கில் போட்டியிடும் மற்றைய தேசியக் கட்சிகள் வேட்பு மனுக் களைத் தாக்கல் செய்வது தொடர்பான திகதிகள் உத்தியோ கபூர்வமாக அறிவிக்கப்பட வில்லை. (ஐ-07)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை இரு வாரங்க ளுக்குப் பார்வையிடப் பார்வை யாளர்கள் அனுமதிக்கப்பட மாட் டார்கள் எனச் சிறைச்சாலை திணைக்களம் அறிவுறுத்தியுள் ளது.

### கொரோனாத் தொற்றுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. நோய்த் தாக்கத்துக் குட்பட்டவர்கள் என நேற்று மட்டும் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் இலங்கை யில் கொரோனா தொற்று உறு திப்படுத்தப்பட்டவர்களின் எண் ணிக்கை 28 இலிருந்து 43 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுப் புதிதாகத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் களில் நாட்டில் முதலாவதாக கொரோனா வைரஸ் தொற் றுக்குள்ளான சுற்றுலா வழிகாட் டியின் மனைவியும் அடங்குகின் றார். இவர்களின் 13 வயது மக ளும் நேற்று முன் தினம் கொரோனா தொற்றுக்குள்ளாகி யுள்ளார் என அடையாளம் காணப்பட்டிருந்தார். தந்தை, தாய், மகள் மூவரும் கொழும்பு, அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தந்தையின் உடல்நிலை தேறி வருகின்றது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் மேலும் கூறினார்.

இதேவேளை, 16 தனிமைப்ப டுத்திக் கண்காணிக்கும் மத்திய நிலையங்களினூடாக 2 ஆயி ரத்து 250 இற்கும் மேற்பட்டோர் கண்காணிக்கப்பட்டு வருகின்ற னர் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலை வரும் இராணுவத் தளபதியு மான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுத் தெரி வித்தார். (ஐ)

## யாழ் வழக்குகளுக்கு புதிய தவணைக்கான திகதி பின்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இந்த வாரம் தவ ணையிடப்பட்ட வழக்குகள் அனைத்துக்குமான மறு தவணை பின்னர் அறிவிக் கப்படும் என்று நீதிமன்றப் பதி வாளர் திருமதி வாசுகி அறி வித்துள்ளார். நாட்டின் அசாதா ரண நிலை காரணமாக மார்ச் 16ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீதி மன்ற நடவடிக்கைகளை மட்டுப் படுத்துவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதனால் யாழ்ப்பாணம் நீதி வான் நீதிமன்றில் இந்த வாரம் தவணையிடப்பட்ட வழக்குகள் அனைத்துக்குமான மறுதவணை பற்றிய விவரம் நீதிமன்ற அறி விப்புப் பலகையில் பின்னர் வெளியிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பித்து வைக்கப்பட்டது.

மாநகர சபை உறுப்பினரின் சொந்த நிதியில் இருந்து மக் களை விழிப்பூட்டி சுகாதார நடவடிக்கையில் வழிகாட்டுவ தோடு ஏனைய உறுப்பினர்க ளும் இந்த செயல்பாட்டை முன் னெடுக்கும் வகையில் ஆயிரம் முகக்கவசங்கள் விநியோகிக்கும் பணி யாழ்ப்பாணம் பஸ் நிலை யத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக 150 முகக்கவசங்கள் வழங்கப்பட் டன. அவற்றை யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் வழங்கினார்.

இதன்போது குடாநாட்டில் இருந்து பிற மாவட்டங்களிற்கு பயணிக்கும் தனியார் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படத் தயாரான பேருந்து நடத்துநர் கள், சாரதிகள், பயணிகளிற்கும் மற்றும் பாதசாரிகளுக்கும் வழங்கப்பட்டன.

இதன்போது மாநகர சபை உறுப்பினர்களான ம.அருள் குமரன் , ப.தர்சானந் ஆகியோ ரும் பங்குகொண்டிருந்தனர். (ஐ)

### கொரோனா பரவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொரோனா பரவுவ தற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படு கின்றன என ஐக்கிய தேசியக் கட்சியின் தலை வர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

எனவே அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சுகாதாரம் உள் ளிட்ட தொடர்புடையதுறைகளின் பிரதானிகள் அனைவரையும் ஒருங்கிணைத்து, பேச்சு நடத்தி, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்துவ தற்கான பொதுவான செயற் திட்டமொன்றைத் தயாரிக்கு மாறும் அவர் அரசை வலியுறுத் தியுள்ளார்.

தற்போது கொரோனா வைரஸ் தேசிய ரீதியிலான நெருக்கடி நிலையாகும் என தெரிவித்த அவர், இருப்பினும் இதன் பாரதூரத்தன்மை இன்ன மும் பலருக்குப் புரியவில்லை என்பதை எம்மால் உணரமுடி கிறது எனவும் கூறினார்.

தற்போது இந்த மோசமான தொற்றுநோய் இலங்கையில் பரவிவிட்டபோதும் இனி அதனை எம்மால் தடுக்கமுடி யாது என தெரிவித்த ரணில் விக்ரமசிங்க, ஆனால் வைரஸ் தொற்றின் காரணமாக ஏற்படத் தக்க பாதிப்பைக் குறைத்துக் கொள்வதற்காக நாமனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

உலகில் பொருளாதார ரீதி யில் முன்னணி நகரங்களான லண்டன் மற்றும் பாரிஸ் ஆகி யவை கொரோனா வைரஸ் தொற்றின் மத்திய நிலையமா கக் கூடிய வாய்ப்புக்களும் ஏற் பட்டுள்ளமை குறித்துக் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு ஐரோப்பிய நாடு களுடன் ஒப்பிடுகையில் குறைந் தளவான சுகாதார மருத்துவ வசதிகளே எம்மிடம் காணப்படு கின்றன என்றும், வைரஸ் தொற்றுப் பரிசோதனைக்கான வசதிகளும் இங்கே குறைவாக வே உள்ளன என்றும் சுட்டிக்காட் டிய ரணில் விக்கிரமசிங்க, இவற் றின் காரணமாக வைரஸ் தொற்று ஏற்படும் வீதம் அதி கரிக்குமானால் பாரியதொரு நெருக்கடிநிலைக்கு முகங் கொடுக்க வேண்டியேற்படும் எனவும் தெரிவித்தார். (ஐ)

### பருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய சிறப்பு உரையிலேயே இதனைத் தெரிவித்தார். (ஐ)

### 86 ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாளை 19 ஆம் திகதி வரையில் 86 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நாளாந்தம் செயற்படும் அலுவலக ரயில்கள் இதற்கு அமைவாக ரத்து செய்யப்பட் டுள்ளன எனத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### 3 வயதுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மைப்படுத்தப்பட்ட மையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட இந்த குழந்தை கொரோனா அறி குறிகளுடன் நேற்று மாலை பதுளை பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டுள்ளது.

இத்தாலியிலிருந்து வந்த குடும்பமொன்றின் குழந்தையே இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

### யானைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான அணியினர் போட்டியிடவுள் ளனர். இதற்கான வேட்பு மனுவில் விஜயகலா மகேஸ் வரன் நேற்றுக் கைச்சாத்திட்டார். கட்சியின் தலைவரும் முன் னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், சட்ட ஆலோசகர் தயா பொல்பொல ஆகியோர் முன்னிலையில் வேட்புமனுவில் அவர் கைச் சாத்திட்டார். இன்று விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

# முல்லைத்தீவில் 5 இந்தியர்கள் கைது



சுற்றுலா விசாவில் வருகை தந்துவியாபாரம்மற்றும்சாத்திரம் பார்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐந்து இந்தியர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

சுற்றுலா விசாவில் வருகை தந்து, தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட ஐந்து இந்தியர்களை முல்லைத்தீவுபொலிஸார்நேற்று முந்தினம் (திங்கள்) இரவு கைதுசெய்திருந்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து முல்லைத்தீவு நகர் பகுதி மற்றும் குமுழமுனை ஆகிய பகுதிகளிலிருந்து இவ்வாறு ஐந்து இந்தியர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சிறீமகா கணபதிபுரம், கூழாமங்கலம், எழும்பூர், தமிழ்நாடு என்றமுகவரியினைச்சேர்ந்தவர்களான, மூக்கையா முனியாண்டி(வயது -37), கறுத்தப் பாண்டி கப்டன் பிரபாகரன்(வயது - 33), பாண்டி குமார்(வயது - 33), முனியாண்டி ஐயப்பன் (வயது-40), கைலாசு கட்டப்பொம்மன் (வயது-53) ஆகிய ஐவருமே இவ்வாறு கைது செய்யப்பட் டிருந்தனர்.

ஐவரையும், பொலிஸார் நேற்று முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதிவான் சுதர்சன் இல்லத்தில் முன் னிலைப்படுத்தினர். அவர்ச்ஐவரையும்எதிர்வரும் 20ஆம்திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# வவுனியா சிறைச்சாலையில் கைதிகள் உண்ணாவிரதம்!

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள கைதிகள்கொரோனா அச்சம்காரணமாக தம்மைப்பிணையில்விடுவிக்க வேண்டும் எனக் கோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸின் தொற்று பற்றிய அச்சம் காரணமாகத் தம்மை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி பிணையில் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

எனினும் சிறைச்சாலை அதிகாரிகள் தங்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து சிறைச்சாலைவளாகத்தில்உணவு தவிர்ப்பில்வர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவுக்கு முகம் கொடுத்து மீண்டெழுந்த சீனநாட்டுக் குழந்தை

சீனாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட குழந்தை பூரண குணமடைந்து மருத்துவமனையை விட்டு வெளியேறியுள்ளது. பிறந்து17நாள்களேயான குழந்தை கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் எந்தவொரு மருந்தையும் பயன்படுத்தாமல் குழந்தை குணப்படுத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவில்கொரோனாவைரஸ் தாக்கத்தில் இருந்து மீண்டெழுந்த குழந்தை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

**மார்ச்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காகப் பொலிஸார், முப்படையினர், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதோடு, அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய சிறப்பு உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் -

நான் இன்று உங்கள் முன்னிலையில் உரையாற்றுவது கொரோனா வைரஸ் (COVID 19) தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் பற்றி உங்களைத்தெளிவுபடுத்துவதற்கேயாகும்.

இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் கோரோனா வைரஸ் தொடர்பாக உலகத்தின் அவதானம் செலுத்தப்பட்டதோடு, சீனாவின் வூஹான் பிரதேசத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த இலங்கை மாணவர்கள் 34பேரை இலங்கைக்கு அழைத்துவர நான் முடிவெடுத்தேன். அந்நேரம் எந்வொரு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவரும் இலங்கையில் பதிவு செய்யப்படாதிருந்தாலும், இந்த வைரஸினால் எதிர்காலத்தில் ஏற்பட முடியுமான ஆபத்தான நிலைக்கு முகங்கொடுப்பதற்காக ஜனவரி மாதம் 26ஆம் திகதி சிறப்பு தேசிய செயலணிக் குழுவொன்றை உருவாக்குவதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டது.

ஜனவரி மாதம் 27ஆம் திகதி இலங்கையில் முதலாவது கோரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவராக இலங்கைக்கு சுற்றுலாவுக்காக வருகை தந்திருந்த சீனப் பெண் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். அவர் உடனடியான ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுஅவருக்குச்சிகிச்சையளிக்கப்பட்டது. அவர் பெப்ரவரி 19ஆம் திகதியாகும்போது முழுமையாக குணமடைந்து இலங்கையிலிருந்து தனது நாட்டுக்குச் சென்றார்.

சிறப்பு விமானமொன்றின் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இலங்கை மாணவர்கள் மத்தளை விமான நிலையத்தில் கண்காணிப்புநடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு தியத்தலாவையில் அமைக்கப்பட்ட கண்காணிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் முகாமில் 14 நாள்கள் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பாதுகாப்பாகத்தத்தமது வீடுகளுக்குச் சென்றனர்.

இக்காலத்தில் விமான நிலையத்தினூடாக வருகை தருபவர்களின் சுகாதார நிலைமை தொடர்பாகஅடிப்படைபரிசோதனைகள் விமான நிலையத்திலேயே மேற்கொள்வதற்கும் அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பெப்ரவரி 26ஆம் திகதி தொற்றுக்குள்ளான சீன பெண் அடையாளம் காணப்பட்ட பின்னர் ஒரு மாதகாலம்வரை வேறு எந்தவொரு நோயாளி பற்றியும்அறியக்கிடைக்கவில்லை. சீனாவிற்கு வெளியே வேறு நாடுகளிலும்வைரஸின்தாக்கம் பரவியதன் காரணமாக இத்தாலி, தென்கொரியா, ஈரான் போன்ற நாடுகளிலிருந்து வருகைதரும் விமானப் பய ணிகள் 14 நாள்களுக்கு கண்காணிப்புக்குட்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்தீர்மானம் மார்ச் மாதம் 9ஆம் திகதி எடுக்கப்பட்டது.

இதன்படி கந்தகாடு, மட்டக்களப்பு கண்காணிப்பு நிலையங்களில் பயணிகளை உள்வாங்குதல் ஆரம்பமாகியது. இது ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தாலி அல்லது கொரியாவிலிருந்து வருகை தந்த ஒரு சிலர் அதற்கு பலத்த எதிர்ப்பை தெரிவித்ததோடு கண்காணிப்பு நிலையங்களுக்கு அழைத்து செல்லும் வழியில் திரும்பிச் செல்லவும் ஒரு சிலர் முற்பட்டனர்.

மார்ச்மாதம் 11ஆம்திகதிஎமக்கு கோரோனா தொற்றுக்குள்ளானமுதலாவதுநபர் இலங்கையில்அடையாளம்காணப்பட்டார். அவர் இத்தாலி சுற்றுலா குழுவொன்றிற்கு வழிகாட்டக் கூடிய சுற்றுலா ஆலோசகராவார்.

கண்காணிப்பு நிலையத்தினுள் மற்றும் அதற்கு வெளியே எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் மூலம் மேலும் பல தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டமையோடு, தற்போது 34 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில் ஜேர்மனியிலிருந்து வருகை தந்த நான்கு பேரைத் தவிர ஏனைய அனைவரும் இத்தாலியில் இருந்து வருகை தந்தவர்கள் அல்லது அவர்களுடன் தொடர்புபட்டிருந்தவர்களாக இருந்தமை மிக முக்கிய விடயமாகும்.

மார்ச் 13ஆம் திகதி முதல் தென்கொரியா, இத்தாலி மற்றும் ஈரானிலிருந்து வருகை தருபவர்களும் கண்காணிப்புக்கு உள்வாங்கப்படுவது ஆரம்பமானது.

இவற்றுள் பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மன், சுவிட்சலாந்து, டென்மார்க், நெதர்லாந்து, சுவீடன் மற்றும் ஆஸ்திரேலியாவும் ஒன்று சேர்ந்தன.

தற்போது இங்கிலாந்து, பெல்ஜியம், நோர்வே, கனடா, கட்டார் மற்றும் பஹ்ரேன் போன்ற நாடுகளிலிருந்து வருகை தருபவர்களும் கண்காணிப்புக்குள் ளாக்கப்படுகின்றனர். நாளை முதல் மறு அறிவித்தல் வரை அனைத்து சுற்றுலா பயணிகளும் வருகை தருவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 10ஆம் திகதி கந்தகாடு மற்றும் பூனானி கண்காணிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை 16 கண்காணிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாம் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் மேலே குறிப்பிட்ட நாடுகளிலிருந்து வருகை தந்த அனைவரையும் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களையும் இனங் கண்டு அவரவர்களின் வீடுகளிலேயே சுயகண்காணிப்புக்குட்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

இதற்காக பொலிஸார், முப்படையினர், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துகின்றமையோடு, அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏனைய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள இலங்கையர்களைப் பொறுப்புடன் செயற்படுமாறும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நாம் அரசால் சிறப்பு விடுமுறையை வழங்கியதற் கான காரணம் வைரஸ் தொற்று பரவுவதை குறைப்பதற்காகவாகும். அதன் உரிய பயன்பாட்டைபெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பயணங்கள், கூட்டாக ஒன்று சேர்தல் மற்றும் விழாக்களிலிருந்து முழுமையாக ஒதுங்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக இதுவரை நாம் மேற்கொண்டிருந்த செயற்பாடுகள், உங்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளை நீங்கள் பின்பற்றுவதன் மூலம் இப்பிரச்சினையை முழுமையாக கட்டுப்படுத்த எம்மால் முடியும்.

அரசு என்ற வகையில் நாட்டு மக்களின் இயல்புவாழ்க்கையை தொடர்ந்து முன்னெடுக்க வழியமைப்பது எமது அடிப்படை பொறுப்பாகும்.

மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசு தலையீடு செய்ய வேண்டும்.

நாட்டில்சிலமாகாணங்களில் தற்போது வரட்சி நிலவுகின்றது. அப்பிரதேச மக்களுக்கு நாம் குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பல பிரதேசங்களில் சிறுபோக பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்க சேற்றுப் பசளை வழங்கப்பட வேண்டும். மேலும் பல பிரதேசங்களில் அறுவடை மேற்கொள்வதனால் அரசு நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரக்கறிகளை உரிய நேரத்தில் கொள்வனவு செய்யாத விடத்து மரக்கறி விவசாயிகள் பாதிக்கப்படுவர். அதேபோன்று மரக்கறிகளை தொடர்ச்சியாக சந்தைக்கு கொண்டு சேர்ப்பதும் அவசியமாகும். அதேபோல் வாழ்க்கைச் செலவையும் நாம் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

அரச ஊழியர்கள் கடமைகளில் ஈடுபடாதவிடத்து அவை அனைத்தும் பாதிப்புக்குள்ளாகும். அனைவரின் மீதும் அவதானத்தை செலுத்தியே நாம் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். நவம்பர் 16ஆம் திகதி நாம் பெற்ற வெற்றியின் பின்னர் எமக்கு அதிகாரம் குறைந்த அரசு ஒன்றை எம்மால் உருவாக்க முடிந்தது. நான் பதவிக்கு வரும்போது கடந்த அரசின் மூலம்வரவுசெலவுதிட்டமொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. நாட்டை இடைக்கால வரவுசெலவு திட்டமொன்றின் மூலமே முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பல்வேறு அத்தியாவசிய கொடுப்பனவுகளுக்காக நிதி ஒதுக்கீடுகளுக்கு அனுமதி பெற்றிருக்கவில்லை. உரம், மருந்து வகைகள், உணவு வழங்குனர்கள் மற்றும் நிர்மாணத்துறையினருக்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. நாம் இதற்காக இடைக்கால நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக்கொள்ள முயற்சி எடுத்தோம். அதற்கு எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்கவில்லை. இந்நிலைமையின் கீழ் நான் உங்களுக்கு வாக்களித்த பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாமல் போனது. அதிகாரம் குறைந்த அரசால் இந்நிதிகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்து அனுமதியை பெற முடியாது.

அதனால்தான் எனக்கு கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்து உறுதியான புதிய அரசு ஒன்றை அமைப்பதற்காகத் தேர்தலை நடத்த உத்தேசித்தோம். நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன், அரசமைப்பின் மூலம் கிடைத்துள்ள அதிகாரத்திற்கமைய நான் இடைக்கால நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதியளித்தேன். அதன்படி அத்தியாவசிய செலவுகளுக்காக நிதிக்கொடுப்பனவுகள்வழங்க ஆரம்பித்தோம். அதனாலேயேதான் தற்போதைய அசாதாரண சூழ்நிலைக்கு முகங்கொடுப்பதற்கும் எம்மால் முடியுமாகவிருந்தது.

அதனால் தேர்தல் ஒன்றை நடத்தி, புதிய நிலையான அரசு ஒன்றை அமைத்து, புதிய வரவு - செலவு திட்டமொன்றை முன்வைத்து, சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் நான் உங்களுக்கு வழங்கிய வாக்கின் பிரகாரம் நிவாரணங்களை வழங்குதல், தொழில் வழங்குதல், விவசாயத்தை ஊக்குவித்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

அதனால் அனுபவ முதிர்ச்சியுள்ள அரசியல்வாதியான, மக்கள் மனங்களை வெற்றி கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பலமான அரசை உருவாக்குவதற்கு எம்மோடு ஒன்றிணையுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கொரோனாக் கொடூரம்!

**கொரோனா வைரஸின் கொடூரப் பிடியிலிருந்து விடுபடுவதற்கும் – அதன் மோசமான வலைக்குள் மேலும் சிக்காமல் தவிர்ப்பதற்கும் – பகீரதப் பிரயத்தன முயற்சிகளை இலங்கை எடுக்கின்றது என்பது கண்கூடு.**

**ஆனால், இவை யாவும் – இந்த நடவடிக்கைகள் எல்லாம் – காலம் பிந்திய செயற்பாடுகள் என்பதுதான் விடயமறிந்த – விவரம் புரிந்த – அவதானிகளின் கணிப்பீடு.**

**குதிரை ஓடிய பின்னர் லாயத்தைப் பூட்டிய கதையாக –கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்யும் முயற்சியாக – கடும் நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்படுகின்றன.**

**சீனாவுக்கு வெளியில் கொரோனா பரவத் தொடங்குகின்றது என்ற தகவல் வந்தவுடனேயே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அப்போது மெத்தனமாக நடந்து விட்டு, இப்போது 'சுடுகிறது மடியைப் பிடி' என்ற கதையாகக் குதிப்பதில் அர்த்தமில்லை.**

**பொதுவிடுமுறை அறிவித்தல், பொது நிகழ்வுகளைத் தடுத்தல், ஒன்று கூடுதலைத் தவிர்க்கச் செய்தல், விமான நிலையத்தை மூடுதல் என்பனவெல்லாம் எப்போதோ செய்திருக்க வேண்டிய விவகாரங்கள்.**

**ஆனால் அவற்றை யார் செய்வது என்பதுதான் இப்போது இங்கு பிரதான கேள்வி.**

**நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டாலும், இங்கு ஒரு காபந்து அரசும், அமைச்சரவையும் அதிகாரத்தில் இருக்கின்றமையை நாம் மறந்து விடக்கூடாது.**

**இந்தக் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் காபந்து அரசோ, அதன் பிரதமரோ, அமைச்சர்களோ ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்கள் என்பது போன்ற செய்தி ஏதுமில்லை.**

**எல்லாமுமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் அவரைச் சூழவுள்ள ஒரு குழாத்தினாலுமே முன்னெடுக்கப்படுகின்றமை துலாம்பரமாகத் தெரிகின்றது.**

**அரசின் அமைச்சர் ஒருவர் கொரோனாத் தடுப்பு நடவடிக்கையை முன்னெடுக்கின்றமையை விடுத்து, கொரோனா வைரஸுடன் அறிக்கைப் போர் புரிகின்ற அசட்டுத்தனம் இங்கு அரங்கேறுகின்றது.**

**கண்ணுக்குப் புலப்படாத இந்த வைரஸ் கட்டுப்படுத்த முடியாத நோயை – சாவுக்கான அழைப்பை – முன்னெடுத்தபடி தீவிரமாகப் பரவி வருகின்றது.**

***"உலகின் மிக மோசமான பயங்கரவாத அமைப்பான புலிகளையே தோற்கடித்து அடக்கிய எங்களுக்கு கொரோனாவை அடங்குவது ஒரு பெரிய காரியமா? இல்லவே இல்லை. அது ஜுஜுபி வேலை!"*** **– என்று இறுமாப்போடு அறிக்கைப் போர் நடத்தினார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.**

**ஆனால், இப்போதோ விமான நிலையங்களையே மூடிவிட்டு, 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' – என்று ஓடித் தப்பும் மோசமான நிலைமை.**

**முன்னாள் இராணுவக் கேணலும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முழு ஆட்சித் தரப்புமே இராணுவமயப்படுத்தப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள பின்புலத்தில் –**

**கொரோனா வைரஸ் சிக்கலை ஒட்டிய விவகாரத்திலும் அது மேலும் ஊர்கிதப்படுத்தப்பட்டிருக்கின்றது.**

**நோய்த் தடுப்பிலும், மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையிலும் துறைதோய்ந்த ஒருவர் அமர வேண்டிய ஒரு பதவியில் இராணுவத் தளபதி அமர்த்தப்பட்டிருக்கின்றமை இந்த இராணுவமயப்படுத்தலை உறுதிப்படுத்தி, ஊர்ஜிதம் செய்யும் ஒரு நடவடிக்கையாகும்.**

**கொரோனா வைரஸைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் பணியை முன்னெடுக்கும் பொறுப்பில் உள்ள தேசிய மத்திய நிலையத்தின் தலைவராக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டிருக்கின்றமை, இந்த வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியிலும் பெரும் சர்ச்சையைக் கொழும்பில் கிளம்பியிருக்கின்றது.**

**ஒரு புறம் பொதுஜன பெரமுன தரப்பின் பிதாமகர் என்று போற்றப்படும் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராகக் கொண்ட அரசும், அதன் கட்டமைப்பும் இந்தத் தேசியப் பிரச்சினையை – பேரிடரை – கையாளும் முக்கிய பொறுப்பில் ஒதுக்கி, புறத்தள்ளப்பட்டு, வெளியேற்றப்பட்டு, வெறும் அவதானித் தரப்பாக இருக்கின்ற நிலைமை.**

**பேரிடரைக் கையாளும் நிர்வாக விடயம் கூட இராணுவமயப்படுத்தப்படும் பேராபத்தான செயற்போக்கு மறுபுறம்.**

**இவற்றுக்கு மத்தியில் இந்த நெருக்கடியிலிருந்து நாடு எப்படித் தப்பி மீளப் போகின்றது?**

**தந்தை செல்வா கூறிமைபோல தமிழினத்தை மட்டுமல்ல, இந்த முழு இலங்கைத் தீவையுமே கடவுள்தான் இனிக் காப்பாற்ற வேண்டும்.**

# மிக அமைதியான முறையில் ஆலயங்களில் வழிபடுவோம்

## சர்வதேச இந்து இளைஞர் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைத்து இந்துமத வழிபாட்டுத்தலங்களிலும் அமைதியான முறையில் அடியவர்கள் வழிபடலாம் எனவும் நித்திய கைங்கரியங்களில் எந்த மாற்றமும் ஏற்படுத்த தேவை இல்லை எனவும் நைமித்திய பூஜைகளை ஆடம்பரமில்லாது அமைதியாகச் செய்து கொள்ளவும் எனவும் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ.ஜெ.மயூரக்குருக்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

இன்று உலகநாடுகளை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொறோனா வைரஸானது பல மனித உயிர்களை காவு கொண்டுள்ளதுடன் மிக வேகமாகப் பரவியும் வருகின்றது. அதனைக் கட்டுப்படுத்த பல உலக நாடுகள் திணறி வருகின்றன. ஆனால் அது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதை நாம் அனைவரும் அறிவோம்.

அதனை மேலும் பரவாமல் செய்ய பல வழிகளை எமக்குச் சொல்லியிருக்கின்றது. மருத்துவத்துறையும், அரசும் எனவே அவற்றை செய்ய வேண்டியது அனைவரது கடமையுமாகும்.

அதனால் இந்த நோய்த்தாக்கத்தில் இருந்து நாம் அனைவரும் காக்கப்படவேண்டுமேயானால் சில முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு தொடுகைகள் மற்றும் சுவாசங்கள் மூலம் பரவுவதால் பலர் ஓரிடத்தில் சேரும்போது அதனுடைய பரம்பல் பரவலடையும் எனவே அப்படியான சந்தர்ப்பங்களை அனைவரும் தவிர்த்துக்கொள்வோம்.

இது அனைவரது உயிர்சார்ந்த நடவடிக்கையாகும். அதனால் நாம் ஆலயங்களில் தற்காலிகமாக அதிகமாக கூடுவதனைத் தவிர்கலாம். பொது நன்மைகள் கருதி அவற்றை குறைத்துக் கொள்வதில் எந்த இடையூறுகளும் ஏற்படப்போவதில்லை. வழமையான வழிபாடுகளுக்கும் எந்த குந்தகமும் ஏற்படப்போவதில்லை. எனவே மருத்துவர்களின் ஆலோசனைப்படி அவற்றை மேற்கொள்வதுடன் அனைத்து சுகாதாரத் தொண்டர்கள் மருத்துவர்களுக்கும் பூரண ஆதரவினை வழங்கி அவர்களின் செயற்பாடுகள் சிறப்பாக அமைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

தேவை ஏற்படும் போது சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் அனைத்து இளைஞர்களும் உறுப்பினர்களும் களத்தில் இறங்கி வேலை செய்யவும் தயாராக உள்ளனர். எனவே ஆலயம் சார்ந்தோர்கள் இதனை நடைமுறைப்படுத்துமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம் – என்றார். (ஜ – 100)

# திலகர்,லோரன்ஸ், குருசாமிக்கு தேசியப் பட்டியலில் ஆசனம்!

கொழும்பு, மார்ச் 18

2020 ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின்கீழ் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் விவரம் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனால் பட்டியல் வெளியிடப்பட்டது.

மாவட்டவாரி பட்டியல் வேட்பாளர்கள்

01 பதுளை – ஏ. அரவிந்தகுமார் – (மலையக மக்கள் முன்னணி)

02 நுவரெலியா – வி. ராதாகிருஷ்ணன் – (மலையக மக்கள் முன்னணி)

03 நுவரெலியா – பி. திகாம்பரம் – (தொழிலாளர் தேசிய முன்னணி)

04 நுவரெலியா – எம். உதயகுமார் – (தொழிலாளர் தேசிய முன்னணி)

05 கண்டி – எம். வேலுகுமார் – (ஜனநாயக மக்கள் முன்னணி)

06 இரத்தினபுரி – எம். சந்திரகுமார் – (ஜனநாயக மக்கள் முன்னணி)

07 கம்பஹா – எஸ். சசிகுமார் – (ஜனநாயக மக்கள் முன்னணி)

08 கேகாலை – எம். பரணிதரன் – (ஜனநாயக மக்கள் முன்னணி)

09 கொழும்பு – வி. ஜனகன் – (ஜனநாயக மக்கள் முன்னணி)

10 கொழும்பு – மனோ கணேசன் – (ஜனநாயக மக்கள் முன்னணி)

தேசியப் பட்டியல் வேட்பாளர்கள்

01 எம். திலகராஜ்

02 கே.ரி. குருசாமி

03 ஏ. லோரன்ஸ்

(தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் நியமிக்கப்படும் தேசிய பட்டியல் எம்பிக்கள், கூட்டணிக்கு உள்வரும் கட்சி அடையாளத்தை கைவிட்டு த.மு.கூ. உறுப்பினராக கருதப்படுவர்). (ஐ)

# மன்னாரில் வீடுகளில் முடங்கினர் மக்கள்!


இயல்பு வாழ்க்கை பாதிப்பு

மன்னார், மார்ச் 18

நாடு முழுவதும் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்திய 'கொரோனா வைரஸ்' தாக்கம் தற்போது இலங்கையிலும் ஏற்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்ட மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில், மக்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மக்கள் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட மக்களின் இயல்பு நிலை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மக்கள் வெளி இடங்களுக்கு மேற்கொள்ளும் பிரயாணங்களை குறைத்துள்ளனர்.

போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சந்தை, பஸார் பகுதி உட்பட பொது இடங்களில் மக்களின் வருகை குறைவடைந்த நிலையில் உள்ளது.

அரசால் அறிவுறுத்தப்பட்ட அரச திணைக்களங்கள், வங்கிகளை தவிர ஏனைய அரச தனியார் நிறுவனங்கள் நேற்று இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

**நாளை 19.03.2020 - வியாழக்கிழமை**

நட்சத்திரம்: உத்தராடம் மாலை 6.11 வரை
திதி : தசமி மு.ப 8.30 வரை

இராகுகாலம் : 1.48 – 3.18
சுப நேரம் : 7.48 – 9.18

# கொரோனா வைரஸ் எதிரொலி முடங்கியுள்ளது முல்லைத்தீவு

## நகர்ப் பகுதிகள், சிறு வியாபாரிகள் நாளாந்த தொழிலாளர் பல்வேறு பாதிப்பு







யாழ்ப்பாணம், மார்ச் 18

கொரோனா வைரஸ் தொடர்பில் பதற்றமான சூழ்நிலை நிலவும் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாக காணப்படுவதால் சிறு வியாபாரிகள், நாளாந்தத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக பல்வேறு இன்னல்களுக்குமுகம்கொடுத்துள்ளனஎனத்தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள்நடமாட்டம்மிகவும்குறைவாக காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வர்த்தக நிலையங்களை திறந்து வைத்திருக்கும் வர்த்தகர்கள் மக்களின் வருகை இன்மை காரணமாக வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாது பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகக் கூறினர்.

அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச, தனியார் பஸ்களில் மக்கள் மிகச்சொற்ப அளவிலேயே பயணிகள் பயணிக்கின்றனர். இதனால் தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்தனர்.

இவ்வாறு சிறு சிறு வியாபாரம் மற்றும் தொழிலில் ஈடுபடுகின்ற பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் நேற்று வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது.

# 7 மாவட்டங்களில் நேற்று மொட்டு கட்சி வேட்புமனு



கொழும்பு, மார்ச் 18

நுவரெலியா உட்பட ஏழு மாவட்டங்களுக்கான வேட்புமனுக்களை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நேற்றுத் தாக்கல் செய்தது.

மாவட்டத் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களே, தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்குச் சென்று வேட்பு மனுக்களைக் கையளித்தனர்.

பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களை மார்ச் 12 முதல் 19 திகதி வரைத் தாக்கல் செய்யலாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இதன்படி அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துவருகின்றன.

இந்நிலையிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நுவரெலியா, களுத்துறை, அம்பாந்தோட்டை, கண்டி, பொலனறுவை, புத்தளம், கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கான வேட்புமனுக்களை நேற்று தாக்கல் செய்தது.

மாவட்டத் தலைவர்கள் விவரம்,

நுவரெலியா – ஆறுமுகன் தொண்டமான்.

கண்டி – மஹிந்தானந்த அளுத்கமகே.

கேகாலை – கனக ஹேரத்.

அம்பாந்தோட்டை – சமல் ராஜபக்ஷ.

களுத்துறை – ரோகித அபேகுணவர்தன

புத்தளம் – சனத் நிஷாந்த

பொலனறுவை – ரொஷான் ரணசிங்க.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியும் கண்டி மாவட்டத்துக்கான வேட்பு மனுவை நேற்று கையளித்தது.

# பிரிட்டனிலிருந்து வந்த யாழ்ப்பாண மூதாட்டி கொரோனா சந்தேகத்தில் வைத்தியசாலையில்!

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

*பிரித்தானியாவில் இருந்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டார்.*

*யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் அண்மையில் பிரிட்டனிலிருந்து வருகை தந்துள்ளார். அரசின் அறிவுறுத்தலுக்கு அமைய வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் பரிசோதனை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் தனக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்ற அச்சத்தில் அவரது உறவினர்கள் ஊடாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ள அவர் தொடர்பில் மருத்துவ சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவரது மருத்துவ அறிக்கை வந்த பின்னரே அவருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்கின்றதா? இல்லையா? என்று உறுதியாக தெரிவிக்க முடியும் என்று யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் தெரிவித்தனர்.(ஐ - 07)*

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை வியாழக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை–**

**யாழ் பிரதேசத்தில் -**

நுணாவில், மட்டுவில், கல்வயல், கல்வயல் சந்திரபுரம், வேம்பிராய் Cemetery, மட்டுவில் இராணுவ முகாம், மட்டுவில் முத்துமாரிஅம்மன்கோவிலடி ஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில்–**

பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில்–**

பகலஅளுத்வத்த கிராமம், கோவில்புதுக்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடையிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# தாஜ்மஹாலும் மூடப்பட்டது



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தாஜ் மகால் மூடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த உலகத்தையும் ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸின் தாக்குதலுக்கு இந்தியாவில் 114 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாசகாரக் கிருமியின் வேகத்தைக் கட்டுப்படுத்தப் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்துள்ள இந்திய மத்திய அரசு திரையரங்குகள் மற்றும் அருங்காட்சியங்களையும் மூடும்படி உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து இந்தியாவின் மிக முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றானதும், உலக அதிசயங்களில் முக்கியமானதுமான தாஜ்மகால் மூடப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு பார்வையாளர்கள் வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தல் விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை



உத்தரப்பிரதேச மாநிலத்தில் கொரோனா பாதிக்கப்பட்டவர்களிடம் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள், தனிமைப்படுத்தலுக்கான விதிகளை மீறினால், அவர்களது செல்ஃபோன் தொடர்புகள் கண்காணிக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

லக்னோவில் கொரோனா பாதிப்பு உறுதிப்படுத்தப்பட்ட இருவரிடம் நேரடித் தொடர்பில் இருந்ததாக 11 பேர் வீட்டுக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

அனைவரையும் தனித்தனியாக கண்காணிப்பது சாத்தியமில்லை என்பதால் காய்கறி வியாபாரி உள்ளிட்ட அவர்கள் பிற மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளாமல் சமுகப் பொறுப்புணர்வுடன் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

விதிகளை மீறினால் அவர்களின் செல்போன் எண் மூலமும், அக்கம்பக்கத்தினர் மூலமும் கண்காணிக்கப்படுவார்கள் என்றும் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்

# இந்தியாவில் கொரோனாவினால் மேலும் ஒருவர் நேற்று உயிரிழப்பு

இந்தியாவில் கொரோனாவுக்கு மேலும் ஒருவர் பலியானார்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 150 க்கும் அதிகமான நாடுகளுக்கு பரவியுள்ளது.

இந்த வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் இதுவரை 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழுந்துள்ளனர். மேலும் 1 லட்சத்து 82 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, இந்தியாவிலும் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருகிறது. நாடு முழுவதும் 125 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியிருக்கின்றது என மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் மும்பை மருத்துவமனையில் கொரோனா வைரஸுக்கு சிகிச்சை பெற்றுவந்த 64 வயது நிரம்பிய நபர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழுந்தர். இதனால் இந்தியாவில் கொரோனா தாக்குதலுக்கு உயிரிழுந்தோர் எண்ணிக்கை 3 ஆக அதிகரித்துள்ளது.

# பொலிஸார் துன்புறுத்துகின்றனர் கமல் நீதிமன்றத்தில் முறைப்பாடு

'இந்தியன் 2' – படப்பிடிப்புத் தளத்தில் நடந்த விபத்து தொடர்பான விசாரணையில் பொலிஸார் தன்னைத் துன்புறுத்துகின்றனர் என நடிகர் கமல்ஹாசன் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர முறையீடு செய்துள்ளார்.

'இந்தியன் 2' படப்பிடிப்புத் தளத்தில் கடந்த மாதம் 19 ஆம் திகதி கிரேன் விழுந்த விபத்தில், 3 பேர் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் மத்திய குற்றப்பிரிவு பொலிஸார், நடிகர் கமலுக்கு சம்மன் அனுப்பி விசாரித்து வருகின்றனர்.

இதனிடையே தாம் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வரும் நிலையில், விபத்து குறித்து நடித்து காட்டும்படி மத்திய குற்றப்பிரிவு பொலிஸார்



தொடர்ந்து வற்புறுத்துகின்றனர் என நடிகர் கமல்ஹாசன் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பாக நீதிபதி இளந்திரையன் முன்பு அவசர முறையீடு செய்யப்பட்ட நிலையில், வழக்கை நேற்றுப் பிற்பகல் விசாரிக்க நீதிபதி ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

# தமிழை கட்டாயப் பாடமாக்காத பள்ளிகள் மீது கடும் நடவடிக்கை

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை



தமிழைக் கட்டாயப் பாடமாக்காத சி.பி.எஸ்.இ. பள்ளிகள் மீது கடும் நடவடிக்கை தேவை எனப் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாயப் பாடம் ஆக்க பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும், அதிலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி, சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தை கடைபிடிக்கும் தனியார் பள்ளிகள் தமிழ் மொழிப் பாடத்தை கற்பிக்க மறுகின்றன எனக் கூறியுள்ளார்.

மேலும் தமிழ் மொழிக்குத் தனியார் பள்ளிகள் செய்யும் இந்த துரோகம் மன்னிக்க முடியாததாகும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், தமிழகத்திலுள்ள சி.பி.எஸ்.இ: மற்றும் பிற கல்வி வாரிய பள்ளிகள் தமிழை கட்டாய பாடமாக கற்பிப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# கொரோனா குறித்த விழிப்புணர்வை எம்பிக்களே ஏற்படுத்த வேண்டுமாம்!

## பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்துகிறார்



கொரோனா வைரஸ் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 2ஆவது அமர்வு நடைபெற்று வரும் நிலையில், கொரோனா வைரஸ் பரவுவதை சுட்டிக்காட்டி, அதைப் பாதியில் முடிக்க எம்.பிக்கள் சிலர் வலியுறுத்தி வருகின்றனர்.

டெல்லியில் நடைபெற்ற பா.ஜ.கவின் எம்.பிக்கள் கூட்டத்தில் பேசிய மோடி, எம்.பிக்கள் நாட்டு மக்கள் 130 கோடி பேரின் பிரதிநிதிகள் என்றும், இந்நிலையில் கூட்டத் தொடரை பாதியில் முடிக்கக் கூறுவது ஏமாற்றம் அளிக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

பட்ஜெட் கூட்டத் தொடர் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை தொடரும் என்று கூறிய மோடி, கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்களுக்கும், துறைமுகங்கள், விமான நிலைய ஊழியர்களுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

# கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க யோசனை கூறினால் ரூ.1 லட்சம் பரிசு

## இந்தியப் பிரதமர் மோடி அறிவிப்பு



கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் யோசனைகளைக் கூறினால் ஒரு லட்சம் ரூபா பரிசளிக்கப்படும் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் பரவத் தொடங்கி உள்ளதால் அதனை தேசியப் பேரிடராக மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க யோசனைகளை அளிக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், ஓர் ஆரோக்கியமான உலகத்திற்காகப் புதிய யோசனைகளை பயன்படுத்தத் தாம் நினைக்கிறார் எனவும், நிறையப் பேர் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கத் தொழில்நுட்பம் சார்ந்த யோசனைகளை வழங்கி வருகின்றனர் எனவும் கூறியுள்ளார்.

அவ்வாறு ஆலோசனைகளை வழங்குபவர்கள் பிரதமர் அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் டுவிட்டரில் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# நைஜீரியாவில் எரிவாயு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் உடல் கருகி உயிரிழப்பு

நைஜீரியாவில் எரிவாயு (காஸ்) ஆலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் லாகோஸ் மாகாணம் அபுலே அடோ நகரில் காஸ் பதப்படுத்தும் ஆலை உள்ளது. இந்த தொழிற்சாலைக்கு வெளியே ஏராளமான காஸ் சிலிண்டர்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

கடந்த திங்கட்கிழமை காலை இந்த தொழிற்சாலைக்கு வந்த லொறி ஒன்று எதிர்பாராதவிதமாக காஸ் சிலிண்டர்கள் மீது மோதியது. இதில் காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறின.

இதன் காரணமாக தொழிற்சாலையில் இருந்த காஸ் குழாயில் வெடிப்பு ஏற்பட்டு, பயங்கர தீவிபத்து நேரிட்டது. மளமளவென கொழுந்துவிட்டு எரிந்த தீ, கண்இமைக்கும் நேரத்தில் அடுத்தடுத்த கட்டடங்களுக்கு பரவியது.

இதில் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள பெண்கள் கல்லூரி, மாணவிகளுக்கான விடுதி, ஹோட்டல் மற்றும் வீடுகள் உள்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டடங்கள் பலத்த சேதம் அடைந்தன.

இந்த கோர விபத்தில் 17 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் கல்லூரி மாணவிகள் உள்பட 100இற்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

ஆப்பிரிக்க நாடுகளில் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளராக விளங்கும் நைஜீரியாவில் எண்ணெய் மற்றும் காஸ் குழாய் வெடிப்புகள், எரிபொருள் ஏற்றிச் செல்லும் லொறிகள் வெடித்து விபத்துக்குள்ளாவது போன்றவை அடிக்கடி நடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# கொரோனாவைக் கட்டுப்படுத்த தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு?

வொஷிங்டன், மார்ச் 18

ஹாலந்தில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தின் 10 ஆய்வாளர்கள் தாங்கள் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த மருந்து கண்டுபிடித்து விட்டனர் என அறிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸை அழித்து மக்களை காப்பாற்றுவதற்காக மருந்து கண்டுபிடிக்கும் பணியில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிபுணர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஹொலண்ட், ரஷ்யா உள்பட பல நாடுகளில் உள்ள மருத்துவர்கள் போட்டி போட்டு இதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவில் சியாட்டில் நகரில் உள்ள ஓர் ஆய்வு கூடத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை முதலில் விலங்குகளுக்கு கொடுத்து சோதித்து பார்த்தனர். அதில் வெற்றி கிடைத்தது.

இதையடுத்து இந்த தடுப்பு மருந்தை மனிதர்களுக்கு செலுத்தி சோதித்து பார்க்கும் நடவடிக்கைகள் நேற்று தொடங்கின. முதல் கட்டமாக நேற்றுமுன்தினம் 45 பேருக்கு இந்த மருந்து செலுத்தப்பட்டது.

இந்த 45 பேரும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். 18 வயது முதல் 55 வயதுக்கு உட்பட்ட இவர்கள் கொரோனா வைரசை ஒழிப்பதற்காக தாமாக முன்வந்துள்ளனர். இவர்களில் முதன் முதலில் ஜெனிபர் காலர் என்ற பெண்ணுக்கு முதல் தடுப்பு மருந்து ஊசி போடப்பட்டது.

43 வயதாகும் அவர் 2 குழந்தைகளுக்கு தாய் ஆவார். தடுப்பு சோதனை ஊசியை போட்டுக் கொண்ட அவர் தற்போது தனிமை அறையில் வைக்கப்பட்டுள்ளார். மற்றவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஓரிரு நாள்களில் இந்த தடுப்பு மருந்து ஆய்வு முடிவுகள் தெரிய வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சியாட்டில் பரிசோதனை கூடத்தில் கொரோனா வைரஸில் இருந்து மனிதர்களுக்கும் உயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாத சில மரபணு குறியீடுகள் பிரித்து எடுக்கப்பட்டன. அது தடுப்பு மருந்தில் சேர்த்து போடப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆய்வு பணிகள் நடந்து வருகின்றன. முழு வெற்றி கிடைக்க சில மாதங்கள் ஆகும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஹொலண்டில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தின் 10 ஆய்வாளர்கள் தாங்கள் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த மருந்து கண்டுபிடித்து விட்டனர் என அறிவித்துள்ளனர். ஏற்கனவே இந்த ஆய்வு குழுவினர் கொரோனா வைரஸின் முதல் 6 பிரிவுக்கு மருந்து கண்டுபிடித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கவர்கள்.

6ஆவது வகை கொரோனாவுக்கு இவர்கள் முன்பு மருந்து கண்டுபிடித்து இருந்தனர். இதன் அடுத்த கட்ட ஆராய்ச்சியைக் கடந்த சில மாதங்களாக இவர்கள் செய்து வந்திருந்தனர். இந்த நிலையில்தான் தற்போது 7ஆவது வகை கொரோனா வைரஸ் பரவி உள்ளது.

சீனாவில் இந்த வைரஸ் பரவியதும் அவர்கள் ஏற்கனவே கண்டுபிடித்த மருந்துகளின் அடிப்படையில் புதிய தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தனர்.

அந்தத் தடுப்பு மருந்தை எலியிடம் செலுத்தி ஆய்வு செய்தனர். அதில் வெற்றி கிடைத்தது. இதையடுத்து கொரோனா வைரசுக்கு மருந்து கண்டுபிடித்து விட்டனர் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

சர்வதேச அளவில் அது ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதில் வெற்றி கிடைத்தால் இந்த மருந்தை அதிகளவில் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கும்.

# நேபாளத்தில் விஷ சாராயம்; 17 பேர் சாவு!



காட்மாண்டு, மார்ச் 18


நேபாளத்தில் விஷ சாராயம் குடித்த 17 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தின் தெற்கு பகுதியில் உள்ள தனுசா மாவட்டத்தை சேர்ந்த சிலர் ஹோலி பண்டிகையையொட்டி கடந்த 10ஆம் திகதி வீட்டிலேயே மது தயாரித்துக் குடித்தனர்.

அவர்களில் 28 பேருக்கு மது குடித்த சில மணி நேரத்தில் வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டது. இதையடுத்து, அவர்கள் அனைவரும் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 17 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஏனைய 11 பேரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கொரோனாவின் தாக்கம் குறைந்ததால் சீனாவில் சினிமா தியேட்டர்கள் திறப்பு



வுகான், மார்ச்18

சீனாவில் கொரோனா வைரஸ் தாக்கம் குறைந்ததால் பல ஊர்களில் தற்போது தியேட்டர்களைத் திறக்க தொடங்கியுள்ளார்கள்.

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பால் ஆயிரக்கணக்கானோர் கடந்த 50 நாள்களாகப் பாதிக்கப்பட்டனர். இதையடுத்து அங்குள்ள தியேட்டர்களை மூடினார்கள்.

27 நாள்களுக்கும் மேலாக புதிதாக கொரோனா பாதிப்பு ஏற்பட்டதாக மருத்துவமனையில் யாரும் அனுமதிக்கப்பட வில்லை. அங்கு பெருமளவிற்கு கட்டுப்படுத்திவிட்டதாகத் தெரிவிக்கிறார்கள். இதனால், பல ஊர்களில் தற்போது தியேட்டர்களைத் திறக்க தொடங்கியுள்ளார்கள்.

சீனா இந்த பாதிப்பில் இருந்து மீண்டுள்ள நிலையில், உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் கொரானோ பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இதனால், உலகின் பல்வேறு நாடுகளில் இப்போது தியேட்டர்களை மூடி வருகிறார்கள். உலக நாடுகள் தீவிர கண்காணிப்பில் இருந்தால் கொரோனா பாதிப்பைக் கட்டுப்படுத்த முடியும் என்றே பலர் கருதுகிறார்கள்.

# 15 நாள்களுக்கு பொது இடங்களுக்கு செல்லாதீர்கள் என டிரம்ப் கோரிக்கை



கொரோனா வைரஸ் பாதிப்பு கோடைக் காலம் வரை நீடிக்க வாய்ப்புள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடு தழுவிய அளவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டினார். அடுத்த 15 நாள்களுக்கு பொது இடங்களுக்குச் செல்ல வேண்டாம் எனப் பொது மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

10 பேருக்கு மேல் கூட்டமாக சேர வேண்டாம் எனவும், உணவகங்கள், பார்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் போன்ற இடங் களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அவர் வலியுறுத்தினார். கொரோனா நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்க தமது அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பதாக டிரம்ப் மேலும் தெரிவித்தார். அமெரிக்காவில் கொரோனா வைரஸுக்கு 91 பேர் உயிரிழந்த நிலை யில், 4 ஆயிரத்து 700க்கும் மேற்பட்டோர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# சீனப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் கொரோனா வைரஸ் பரிசோதனையில்லை

கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும், சீனாவில் இருந்து இலங்கைக்கு வருகின்ற சீனப் பயணிகளுக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் எந்தவொரு பரிசோதனைகளும் இன்றி நேரடியாகக் கொழும்பு நகருக்குள் வருவதற்கு அனுமதியளிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகளைச் சோதனையிட்டுப் பின்னர் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம்களில் 14 நாள்கள் தங்க வைக்கப்படுகின்றனர். சீனாவுக்கு அடுத்ததாகக் கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளான இத்தாலி நாட்டில் இருந்து வரும் பயணிகள், சிறப்பு முகாம்களில் 14 நாள்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

ஆனால் கொரோனா வைரஸ் தாக்கம் கூடுதலாக ஏற்பட்டுள்ள சீனாவில் இருந்து வரும் சீனப் பயணிகள் எவருமே கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுப் பரிசோதனை செய்யப்படுவதில்லை என்றும் நேரடியாகவே அவர்கள் கொழும்பில் தங்கியிருக்கும் வீடுகள், விடுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத விமான நிலைய அதிகாரியொருவர் கூறினார்.



தமது பிரஜைகளை விமான நிலையத்தில் சோதனையிட வேண்டிய அவசியம் இல்லையென சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்குக் கூறியதாகவும் அதனால் இலங்கைக்கு வரும் சீனப் பயணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதனால் இலங்கையில் குறிப்பாக சீன அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் தொழில் புரியும் சீனப் பிரஜைகள் அதிகமாக வாழும் கொழும்பு, அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரிக்கலாமென கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய அதிகாரியொருவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

பிரித்தானியா தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளில் இருந்து இலங்கைக்குக் வரும் அனைத்துச் சர்வதேச விமானப் பயணங்களுக்கும் தடை விதித்துள்ள இலங்கை, சீன விமானத்திற்கு அனுமதியளித்துள்ளதுடன் அந்த நாட்டுப் பிரஜைகள் கொழும்புக்குள் நுழைவதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளதன் நோக்கம் குறித்துக் கேள்விகள் எழாமலில்லை.

இந்த விடயம் தொடர்பாக பிரதான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் மௌனமாக இருப்பதாக கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன. இதேவேளை, சீனாவில் இருந்து கொழும்புக்கு வந்து நேரடியாக வவுனியாவுக்குச் சென்று அங்குள்ள தமது வீட்டில் தங்கியிருந்த சீனக் குடும்பம் ஒன்று இலங்கைப் பொலிஸாரினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் வழங்கிய தகவல் அடிப்படையிலும், மக்களின் கடும் அழுத்தங்களினாலுமே பொலிஸார் அந்தச் சீனப்பிரஜைகளைத் தனிமைப் படுத்தினர் என வவுனியாத் தகவல்கள் கூறுகின்றன. எனினும் பொலிஸாரின் பாதுகாப்புடன் அந்தப் பிரஜைகள் தற்போது கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் உள்ளகத் தகவல் ஒன்று கூறுகின்றது.


**சீன அரசாங்கத்தின் உத்தரவுக்கு அடிபணிந்ததா இலங்கை?**

இதேவேளை, கொரோனா வைரஸ் தாக்கம் இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படும் நபர்களை தாயகப் பிரதேசமான மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டடத் தொகுதி ஒன்றில் தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாக மக்கள் சந்தேகிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில்இயங்காமல் இருக்கும் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள காமன்ஸ் கட்டடத் தொகுதியிலேயே தங்க வைக்க ஏற்பாடு செய்யப்படுவதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

ஏற்கனவே மட்டக்களப்பு, வவுனியா போன்ற தாயகப் பிரதேசங்களில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்மைக்குத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில், மன்னார் மாவட்டத்திலும் அவ்வாறு ஏற்பாடு செய்யப்படுகின்றமை இன அழிப்பு நடவடிக்கையா என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தோ பசுபிக் பிராந்திய அரசியல், பொருளாதார நலன்களில் அக்கறை கொண்டுள்ள சீன அரசு, இலங்கை அரசாங்கத்துக்குப் பல்வேறு நிதியுதவிகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. இதனால் சீன அரசின் பல நிபந்தனைகளுக்கு ஏற்கனவே கட்டுப்பட்டிருந்த இலங்கை, தற்போது கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளான சீனப் பிரஜைகளையும் விமான நிலையத்தில் எந்தவிதமான பரிசோதனைகளுமின்றி அனுமதிக்க வேண்டுமென்ற சீன அரசின் அழுத்தங்களுக்கும் உட்பட்டுள்ளதாகவே விமர்சகர்கள் கருதுகின்றனர்.



கொரோனா வைரஸ் கடந்த டிசம்பர் இறுதியில் சீனாவில் வேகமாகப் பரவ ஆரம்பித்ததையடுத்து சீனப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு இலங்கை அரசாங்கம்தடை விதித்திருந்தது. ஆனால் கடந்த சில வாரங்களாக இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.



ஆனால் இந்த தடை நீக்கப்பட்டமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் அதிகாரபூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை. சீனர்கள் இலங்கைக்குக் வருவதற்கு எந்தவிதமான தடையுமின்றி அரசாங்கம் அனுமதியளித்துள்ளமையின் பின்னணியில் நிதியுதவிகளை மையமாகக் கொண்ட காரணங்கள் இருக்கலாமெனக் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

நன்றி: கூர்மை இணையம்

# கொரோனா தொற்று அறிகுறி: 204 பேர் வைத்தியசாலைகளில்



கொழும்பு, மார்ச் 18

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் காரணமாக 204 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஒரு வெளிநாட்டவர் (ஜனவரியில் இனங்காணப்பட்ட சீனப்பெண்) மற்றும் 28 இலங்கையர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சுச் சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி வரையான தகவல்களின் அடிப்படையில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவர், தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் 72 பேர், (ஒரு வெளிநாட்டவர் உட்பட), தேசிய வைத்தியசாலையில் 19 பேர், ராகம போதனா வைத்தியசாலையில் 6பேர், ஹராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் 15 பேர், (2 வெளிநாட்டவர்கள் உட்பட) அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 6 பேர், குருணாகல் போதனா வைத்தியசாலையில் 13 பேர்,

கண்டி தேசிய வைத்தியசாலையில் 4 பேர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒருவர், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் 14 பேர், நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் 15 பேர், இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் 12 பேர், லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 2 பேர் என 204 பேர் கோரோனா அறிகுறிகள் காரணமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ஐ)

# பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 18

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நேற்று நீதிமன்றங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் இந்த வழங்கு நீதிபதி டி.எஸ். சூசைதாசனினால் விசாரணைக்கு விசேடமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கை எதிர்வரும் சித்திரை மாதம் 02ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாநகரில் தொற்று நீக்கி மருந்து விசிறும் நடவடிக்கை





யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் தொற்று நீக்கி மருந்து விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபையினால், சபை எல்லையில் யாழ்.நகர் மத்தி உள்ளிட்ட இடங்களில் கொரோனோ தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும் முகமாக தொற்று நீக்கி மருந்து விசிறும் நடவடிக்கைகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

# ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

*கொழும்பு, மார்ச் 18*

*அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

*நேற்று மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 185.09 ரூபாயாகப் பதிவாகியுள்ளது.* (ஐ)

# தனிமைப்படுத்தப்பட்டோர் வாழும் வீடுகளுக்கு ஸ்ரிக்கர்!

கொழும்பு, மார்ச் 18

கொரோனா தொற்று அபாயத்தினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் வாழும் வீடுகளை அடையாளங் காண்பதற்கான அறிவித்தல்களை நேற்று முன்தினம் முதல் ஒட்டி வருவதாகச் சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு எவரும் செல்ல முடியாது. தனிமைப்படுத்தியோர் வெளியில் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை மீறினால் பிடிவிறாந்தின்றிக் கைது செய்ய முடியும். குற்றமிழைத்தமை உறுதி செய்யப்பட்டால் இரண்டு வருட சிறைத் தண்டனையும் 1000 ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரை தண்ட பணமும் விதிக்கப்படும். இந்த தவறுகளுக்கு ஒத்தாசை வழங்குவோரும் குற்றவாளிகளாகவே கணிக்கப்படுவர். இவர்களுக்கு எதிராகவும் இந்த தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனா தொற்றிய நாடுகளில் இருந்து மார்ச் முதலாம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடையில் நாடு திரும்பியவர்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான 880 பேர் குறித்து தகவல் கிடைத்துள்ளது. அவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறானவர்கள் தங்கியுள்ள வீடுகளை அடையாளங்காண விசேட அறிவித்தல்கள் அந்த வீடுகளில் ஒட்டப்படும். அதில் நோய் பரவாமல் தடுக்கும் வழிவகைகளும் மீறினால் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். கொரோனா நோய் தொற்றியவர்களுடன் பழகியவர்களுடன் பழகியிருந்தாலும் சுயமாக தம்மை தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# இராணுவ அதிகாரி ஒருவரும் கொரோனாவினால் பாதிப்பு

*கொழும்பு, மார்ச் 18*

*இராணுவ அலுவலர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமையை இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உறுதிப்படுத்தியுள்ளார்.*

*வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகளை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ அலுவலரே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.*

*அவர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.*

*நாட்டில் நேற்று முன்தினம் மாலை வரை 28 பேர் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இராணுவ அலுவலரும் உள்ளடங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.* (ஐ)

# புத்தளத்தில் 60 குடும்பங்களை காவலில் வைக்குமாறு பணிப்பு

கொழும்பு, மார்ச் 18

இத்தாலி உள்ளிட்ட நாடுகளிலிருந்து வந்து, புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசித்து வருபவர்கள் உள்ளிட்ட 60 குடும்பங்கள், சுகாதாரச் சேவை அதிகாரிகளால், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற முடியாத வகையில், நீதிமன்ற ஆணை பெறப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் சந்திரசிறி பண்டார தெரிவித்தார்.

இந்த நபர்கள், சுகாதாரச் சேவை அதிகாரிகளின் ஆலோசனைகளை புறக்கணித்துச் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்துள்ளனர். இத்தாலி உள்ளிட்ட சில நாடுகளிலிருந்து வந்த 800க்கும் அதிகமானவர்கள், வென்னப்புவ மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் தங்கியுள்ளனர். இவர்கள், தனிமைப்படுத்தப்படும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் மாவட்ட செயலாளர் கூறியுள்ளார்.

இவர்களில் பலர், புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில், பல விருந்துபசாரங்களையும் நடத்தியுள்ளனர் என்றும் தெரியவருவதாக சுகாதாரச் சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)



காலைக்கதிர்
Kalaikathir



# ரி –20 கிரிக்கெட்டில் இரட்டைச் சதம் ரோஹித் சர்மா மட்டுமே அடிப்பார்

உலகிலேயே ரி –20 கிரிக்கெட்டில் இரட்டைச் சதம் முதல் வீரராக, இந்தியக் கிரிக்கெட் அணியின் ஆரம்ப அதிரடி துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா இருப்பார் என ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் வீரர் பிரட் ஹொக் கூறியுள்ளார்.

இதுவரை ஒருநாள் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் பல வீரர்கள் இரட்டைச் சதம் அடித்துள்ளார்கள். ஆனால், ரி – 20 போட்டிகளில் எந்த




வீரரும் இன்னும் இரட்டைச் சதம் அடிக்கவில்லை.

ஆஸ்திரேலிய அணியின் ஒருநாள் தலைவர் ஆரோன் பிஞ்ச் அதிகபட்சமாக 2018ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கு எதிராக 76 பந்துகளில் 172 ஓட்டங்கள் சேர்த்த போதிலும் இரட்டைச் சதம் அடிக்க முடியவில்லை.

ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடிய மேற்கிந்திய தீவுகள் வீரர் கிறிஸ் கெயில் 66 பந்துகளில் 175 ஓட்டங்கள் குவித்தார். ஆனால், அவராலும் இரட்டைச் சதம் அடிக்கவில்லை.

இந்நிலையில், டுவிட்டரில் ஏராளமான இரசிகர்கள் ஆஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் பிரட் ஹாக்கிடம் ஒரு கேள்வி எழுப்பியிருந்தனர். அதில், ‘ரி – 20 போட்டியில் யார் முதன்முதலில் இரட்டைச் சதம் அடிப்பார் எந்த நாட்டைச் சேர்ந்த வீரராக இருப்பார் என்று கேட்டிருந்தனர்.

இதற்கு பதில் அளித்த பிராட் ஹொக், ‘உலகிலேயே ரி – 20 போட்டிகளில் இரட்டைச் சதம் அடிக்கும் முதல் வீரர், அதற்கு தகுதியான வீரர் என்னைப் பொறுத்தவரை அது இந்திய வீரர் ரோஹித் சர்மாதான். சிறந்த ஸ்ட்ரைக் ரேட் வைத்துள்ளார்.

நல்ல டைமிங்கில் ஷொட்களை அடிக்கும் திறமை உடையவர். மைதானத்தின் அனைத்து திசைகளிலும் சிக்ஸர்களையும் பவுண்டரிகளையும் பறக்கவிடும் திறமை உடையவர்’ எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் துணைத் தலைவர் ரோஹித் சர்மா, கடந்த 2007ஆம் ஆண்டு செப்டம்பரில் டர்பனில் இங்கிலாந்து அணிக்கு எதிராக ரி – 20 போட்டியில் அறிமுகமானார். இதுவரை இந்தியாவுக்காக 94 போட்டிகளில் விளையாடி 2,331 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். சராசரி 32.37 ஆகும். ஸ்ட்ரைக் ரேட் 137 வைத்துள்ளார். இதில் 4 சதங்கள், 16 அரை சதங்கள் அடங்கும்.

ஒருநாள் போட்டியில் இலங்கைக்கு எதிராக 2014ஆம் ஆண்டில் 264 ஓட்டங்கள் சேர்த்து ரோஹித் சர்மா சாதனை படைத்துள்ளார். ஒருநாள் போட்டியில் 3 முறை இரட்டைச் சதம் அடித்த ஒரே வீரர் ரோஹித் சர்மா மட்டுமே. 206 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய ரோஹித் சர்மா 8,010 ஓட்டங்கள் சேர்த் துள்ளார்.

# தமிழ்ப்பெண்ணை மணம் புரியும் ஆஸ்திரேலியா வீரர் மக்ஸ்வேல்

ஆஸ்திரேலியா அணியின் அதிரடி ஆட்டக்காரரான மக்ஸ்வேலுக்கும், தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட வினிராமன் என்பவருக்கும் நிச்சயதார்த்தம் முடிந்த புகைப்படம் தற்போது வெளியாகி பலரது வாழ்த்துக்களை பெற்று வருகிறது.

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி சகலதுறை மட்டுமின்றி உலகளவில் மிகச் சிறந்த அதிரடி வீரராக திகழ்பவர் கிளென் மக்ஸ்வெல்.

கிட்டத்தட்ட 10 வருடங்களாக ஆஸ்திரேலியா அணிக்காக ஆடி வருகிறார். கடந்த 2015 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா அணி உலகக்கிண்ணம் வெல்வதற்கு முக்கிய பங்காற்றினார்.

ஆனால் சமீபகாலமாக மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த, இவர் சென்ற ஆண்டு இறுதியில் தனக்கு மனரீதியாக சில பிரச்சினைகள் இருக்கின்றன கிரிக்கெட்டில் இருந்து தற்காலிக விடுப்பு வேண் டும் என்று கூறி எடுத்துக்கொண்டார்.

இந்த மனரீதியான பிரச்சினையில் இருந்து மக்ஸ்வெல்லை மீட்டு கொண்டு வந்ததில் அவருடைய தோழி வினிராமனுக்கு மிகப்பெரிய பங்கு உள்ளது.

மேலும் அதற்கு பிறகு ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்த மக்ஸ்வெல் தனது சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்தார். அது மட்டுமின்றி தற்போது பல்வேறு ரி – 20 தொடரிலும் அசத்தி வரும் மேக்ஸ்வெல் கடந்த சில வருடங்களாக வினிராமன் என்கிற இந்திய வம்சாவளி பெண்ணுடன் காதலில் இருந்தார்.

மேலும் அவரும் மக்ஸ்வெல்லும் டேட்டிங் செய்து வருகின்றனர். அதுமட்டுமின்றி விருது வழங்கும் விழாவிற்கும் சேர்ந்தே சென்றனர்.

அதன்மூலம் அவர்கள் இருவருக்கும் இருந்த காதல் வெளியானது. பிறகு அதனை இருவரும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டு அவ்வப்போது வினி ராமனுடன் சேர்ந்து புகைப்படங்களையும் வெளியிட்டு வந்தார்.

இந்நிலையில் இந்திய வம்சாவழியை சேர்ந்த வினிராமனை மக்ஸ்வெல்லுக்கு மிகவும் பிடித்துப்போக, தன்னைத் திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்டுள்ளார்.

இதற்கு வினிராமனும் சம்மதிக்க, தற்போது இருவருக்கும் இரண்டு தினங்களுக்கு



முன்பு இந்திய முறையில் திருமணம் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. அந்த நிச்சயதார்த்த புகைப்படத்தையும் வினிராமன் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இவர்களது நிச்சயதார்த்த புகைப்படத்தை ரசிகர்கள் பகிர்ந்து தங்களது வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர். இந்திய வம்சாவளியான வினிராமன் தமிழகத்தை பூர்விகமாக கொண்டவர், மெல்போர்னில் பிறந்து வளர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியன் கிரிக்கெட் சபை தலைமையகம் மூடல்!

கொரோனா பரவுவதற்கு மத்தியில் மும்பையில் உள்ள அதன் தலைமையகம் மூடப்படும் என இந்தியன் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனாவிற்கு 2 பேர் பலியாகியுள்ள நிலையில், 114 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பரவுவதை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாட்டில் உள்ள அனைத்து பள்ளி நிறுவனங்கள், வணிக வளாகங்களை மூட மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்தியன் கிரிக்கெட் சபை தனது ஊழியர்களை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

மேலதிக அறிவிப்பு வரும் வரை அனைத்து கிரிக்கெட் நடவடிக்கைகளும் ஏற்கனவே நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், ஊழியர்கள் ‘வீட்டிலிருந்து வேலை செய்ய’ கோரியுள்ளனர்.

முன்னதாக இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) 2020 இன் தொடக்க திகதியை ஏப்ரல் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது இந்தியன் கிரிக்கெட் சபை.

எட்டு ஐ.பி.எல். அணி வீரர்களும் தங்கள் பயிற்சியை முடித்துவிட்டு வீடு திரும்பியுள்ளனர். 13ஆவது ஐ.பி.எல். தொடர் நடக்குமா என்பது குறித்து இன்னும் தெளிவான தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

# பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் காலவரையின்றி ஒத்திவைப்பு!

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் சுற்றுப் பயணம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, முன்னதாக பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்




கொண்டு மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட இருந்து.

ஆனால் பாகிஸ்தான் மீதான அச்சப் போக்கினால் முதற் கட்டமாக, மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரிலும், ஒரேயொரு டெஸ்ட் போட்டியிலும் விளையாடுவதற்கு பங்களாதேஷ் தீர்மானித்து.

இதன்படி கடந்த ஜனவரி மாதம் இப்போட்டித் தொடரில் விளையாடியது. இதில் முதலாவதாக நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை பாகிஸ்தான் அணி 2 – 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி, இன்னிங்ஸ் மற்றும் 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதனையடுத்து மீதமுள்ள ஒரேயொரு ஒருநாள் போட்டியில் விளையாடுவதற்காக எதிர்வரும் 29ஆம் திகதி பாகிஸ்தானுக்கு செல்ல திட்டமிட்டு இருந்தது.

அதேபோல், ஏப்ரல் 5ஆம் திகதி இரு அணிகளும் பங்கேற்கும் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டி ராவல் பிண்டியில் நடைபெற இருந்தது.

ஆனால், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இந்தத் தொடரை காலவரையின்றி ஒத்திவைக்க இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் முடிவு செய்துள்ளன.

ஏற்கனவே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மார்ச் 25ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த உள்ளூர் ஒருநாள் கிரிக்கெட் தொடரான பாகிஸ்தான் கிண்ண ஒருநாள் தொடரை காலவரையின்றி ஒத்திவைத்துள்ளது.

உலக சுகாதார அமைப்பால் தொற்றுநோயாக அறிவிக்கப்பட்ட இந்த வைரஸ், உலகெங்கிலும் உள்ள முக்கிய விளையாட்டு போட்டிகளை நிறுத்தி வைத்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் ஏற்கனவே இங்கிலாந்தின் இலங்கை சுற்றுப்பயணம், தென்னாப்பிரிக்காவின் இந்திய சுற்றுப்பயணம், நியூசிலாந்தின் அவுஸ்ரேலியா சுற்றுப்பயணம் அயர்லாந்து மற்றும் சிம்பாப்வே தொடர், இதன் விளைவாக பாதிக்கப்படுவதைக் கண்டிருக்கிறது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த வடக்கில் புதிய நடைமுறைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வடமாகாணத்தின் கொரோனா வைரஸின் தாக்கத்தை கட்டுப்படுதும் முகமாக ஆளுநரின் பணிப்பின் பேரில் விசேட கலந்துரையாடல் ஒன்று மாகண சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்றது.

வடபகுதியின் சுகாதாரத்துறை மற்றும் நிர்வாகத்துறை சார்ந்த உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டதுடன் முக்கியமான தீர்மானங்கள் சில மேற்கொள்ளப்பட்டன.

* அடுத்துவரும் இரண்டு வாரங்கள் கொரோனா வைரஸ்அவதானத்துக்குரியவாரங்களாகபிரகடனபடுத்தபட்டு பாரியளவில் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லல்.

* பொது மக்கள் ஒன்று கூடும் வைபவங்கள், நிகழ்வுகள், விழாக்களை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்தல்.

சு ஏற்கனவே ஒழுங்கு செய்யபட்ட குடும்ப நிகழ்வுகளை (திருமண விழா, புப்புனிதநீராட்டு விழா, பிறந்தநாள், அந்தியேட்டி) மட்டுப்படுத்தபட்ட அளவுகளில் மிக அவசியமான உறுப்பினர்களுடைய பங்குபற்றுதலோடும் பாதுகாப்பாக நடாத்துவதனை உறுதிப்படுத்தல்.

* அரசால் அறிவிக்கப்பட்ட 14 நாடுகளில் இருந்து (ஈரான், இத்தாலி, தென்கொரியா, ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், நெதர்லாந்து, சுவீடன், ஸ்பெய்ன், சுவிஸ்ஸர்லாந்து, ஐக்கியராச்சியம், பெல்ஜியம், நோர்வே,) குறித்த காலத்துக்குள் (மார்ச் 1 இல் இருந்து) வருகை தந்தவர்கள் தங்களை தனிமைப்படுத்துவதோடு, ஏற்பாடு செய்திருக்கும் சகல விசாரணை மற்றும் பரிசோதனைகளுக்கு தங்களை அவசியம் உட்படுத்த வேண்டும்.

* முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்களுக்கு வெளிநாட்டில் இருந்து வருகை தந்த பயணிகள் மறு அறிவித்தல் வரும் வரை செல்லவதைத் தடுத்தல்

* பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 15.03.2020 சுற்றறிக்கைக்கு அமைவாக ஆளுநர் செயலகம், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள், போன்றவற்றிற்கு பொதுமக்கள் மிக மிக அத்தியாவசிய தேவைகளைத்தவிர இதர காரணங்களுக்காக செல்வதை தவிர்க்க வேண்டும்

* மோட்டார் வாகன வரி அனுமதி பத்திரங்களை 17.03.2020 தொடக்கம் 31.03.2020 வரை புதுப்பிக்க இருப்பவர்களுக்கு புதுப்பித்தல் செயற்பாடுகள் தற்காலிகமாக இடை நிறுத்தபட்டுள்ளது. இவ் அறிவித்தல் போக்குவரத்து பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

* அரச மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் பிரத்தியேக புறக்கிருத்திய மற்றும் கல்விசார்ந்த நிகழ்ச்சிகள், பிரதேச மட்ட கழக விளையாட்டு நிகழ்வுகள், சனசமூக நிலையங்கள் போன்ற பொது அமைப்புக்களின் மக்கள் ஒன்று கூடும் சகல நிகழ்ச்சிகளும் இரு வாரங்களுக்கு தடை செய்யப்படுகிறது.

* பொது போக்குவரத்து வாகனங்கள் பூரண கிருமித்தொற்று நீக்கலுக்கு அவசியம் உள்ளாக்கபடல் வேண்டும்.

மேற்குறித்த தீர்மானங்களை நடைமுறைபடுத்துவதன் அவசியத்தை உணர்ந்து அனைவருடைய பாதுகாப்பையும் கருதி பொறுப்புணர்வோடு செயற்படுத்துவதென இதன் போது தீர்மானிக்கப்பட்டது. (ஐ - 07)

# தொடர் வாந்தியால் குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

பிறந்து நான்கு நாள்களளான ஆண் குழந்தை தொடர்ச்சியாக வாந்தி எடுத்த நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

துன்னாலை மேற்கு கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் - புவனேஸ்வரி தம்பதிக்குக் கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

குழந்தை வீட்டில் இருந்தபோது நேற்று முன் தினம் வாந்தியெடுத்துள்ளது. இதனை அவதானித்த பெற்றோர் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அன்றைய தினம் இரவு யாழ். பேதனா வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்டுள்ளது. எனினும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிலமணி நேரங்களில் அந்தக் ஆண்குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்த இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ். போதனாவைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-07)

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

காலைக்கதிர் Kalaikathir



# சண்டித்தனமும் சர்வாதிகாரமும் மாற்று அணியின் தேவையை அவசியமாக்கி வருகின்றன!

சம்பந்தனின் உள்வீட்டுச் சண்டித்தனமும், சுமந்திரனின் சுத்துமாத்துச் சர்வாதிகாரமும் கூட்டமைப்பை மக்கள் மத்தியில் மதிப்பிறக்க வைத்துள்ளன. இதனால் மாற்று அணியொன்றின் அவசியம் மக்களால் ஆழமாக வேண்டப்படுகிறது. அது, கொள்கை அடிப்படையிலா, பதவி அடிப்படையிலா, தலைமைத் தெரிவு அடிப்படையிலா என்று விளங்காத நிலையே இப்போது காணப்படுகிறது.

இந்த ஆண்டின் மாபெரும் உயிராயுதமாக ‘கொரோனா’ என்ற வைரஸ் உலகம் முழுவதையும் ஆக்கிரமித்து, ஆயிரக்கணக்கானவர்களின் உயிரை இதுவரை காவு கொண்டுள்ளது.

சீனாவின் வுகான் மாகாணத்தில் ஆரம்பித்த




இந்த உயிர்கொல்லியால் லட்சோப லட்சம் மக்கள் உலகின் பல நாடுகளில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டும், தனிமைப்படுத்தப்பட்டும் ’நாளை என்னவோ’ என்று தெரியாது தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

பல நாடுகளின் பிரதமர்கள், தலைவர்கள், அமைச்சர்கள் தங்களைத் தனிமைப்படுத்தி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஐரோப்பிய நாட்டவர் எவரும் அமெரிக்காவுக்குள் நுழையக்கூடாதென்று ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இவர் எதனைச் செய்தாலும் வித்தியாசமாகச் செய்பவர். ஒருவகையில் இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்களைப் போன்றவர் ட்ரம்ப்.

கொரோனா அபாயம் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. தினமும் பலர் அடையாளம் காணப்பட்டுதடுப்புமையங்களுக்குஅனுப்பப்படுகின்றனர்.

ஒருகாலத்தில் அங்கொட என்று சொன்னால் அங்குள்ள மனநோய் (இதனை விசர் ஆஸ்பத்திரி என்று பொதுவாகச் சொல்வர்) மருத்துவமனைதான் ஞாபகம் வரும். 1960 – 70களில் அரியாலையைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் அருளம்பலம் அவர்களின் தலைமையில் இயங்கியது இந்த மருத்துவமனை.

இப்போது கொரோனா சந்தேக ஆள்களை அங்கொட மருத்துவமனைக்கு அனுப்புகின்றனர். இன்னொரு தொகையினர் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர். ஜனாதிபதி கோட்டாபயவின் தனிப்பட்ட தெரிவே மட்டக்களப்பு



மருத்துமனையென ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் அனுமதிக்கப்பட்ட சிலர் திடீரென அங்கொடவுக்கு மாற்றப்பட்டமையை அறிந்த கோட்டாபய இதுபற்றி ராணுவத்தளபதி சவேந்திர சில்வாவிடம் வினவியபோது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளின்படி இந்த மாற்றம் இடம்பெற்றதாகக் கூறியுள்ளார்.

இந்த பதிலில் சினமடைந்த கோட்டாபய, ”அவர் (மஹிந்த) இப்போதும் தாமே ஜனாதிபதியென நினைத்துக் கொண்டிருக்கிறார் போலும் என்று கூறி நையாண்டி பண்ணியமையோடு, தாமே ஜனாதிபதி – தமது உத்தரவின்படியே – செயற்பட வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

கொரோனா காய்ச்சல் அண்ணன் தம்பிக்கிடையிலிருந்த காய்ச்சலை இப்போது அம்பலப்படுத்தியுள்ளது. இது எதிர்பார்த்ததும் கூட.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தளவில் கொரோனா அச்சமில்லையென்று யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். எனினும் தனியார் வகுப்புகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளோடு யாழ். மாவட்டப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. குடாநாட்டில் பெருமளவு அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு மக்கள் வணிக நிலையங்களுக்குப் படையெடுத்துள்ளனர்.

ஒருபுறம் கொரோனா எங்கும் தலைவிரித்தாட, அதற்கு நிகராக இலங்கையின் தேர்தல் களம் ததிகிணதோம் என ஆட்டம் போடுகிறது. கொரொனா காரணத்தால் ஏப்ரல் 25 தேர்தல் பின்போடப்படலாமென்றவதந்தியைதேர்தல்ஆணையம்மறுத்துள்ளது.

எதுவானாலும் தேர்தல் திருவிழா என்பது வேட்பாளர் நியமனத்துக்கு முன்னரே பெரும் களேபரமாகியுள்ளது.

இறந்துபோன மூன்று முன்னாள் ஜனாதிபதிகளைவிட, உயிருடன் இருக்கும் மிகுதி மூவரில் சந்திரிகா குமாரதுங்கவும், மைத்திரிபால சிறிசேனவும் இப்போது செல்லாக்காசாகி விட்டார்கள்.

மற்றொருவரான மஹிந்த மட்டும் ஆடுகளத்தில் நிற்கிறார். இவரது எதிர்காலம் கோட்டாபயவின் காலடிகளில்தான் தங்கியுள்ளது. முன்னர் ஒரு தடவை இப்பந்தியில் குறிப்பிட்டதுபோல சிலவேளை கோட்டாபயவின் இந்த ஆட்சிக்காலத்தில் மஹிந்த கரையொதுக்கப்பட்டு விடலாம்.

ஐக்கிய தேசிய கட்சியென்பது ஐக்கியம் இல்லாத கட்சியாக மாறி ரணில் அணி, சஜித் அணியென இரண்டாகிவிட்டன. கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலின்போது கருவான பிளவு இப்போது உருவமெடுத்து ஒரு வீட்டுக்குள் யானையா, அன்னமா என வேறுபட்டு நிற்கின்றன. நியமனப் பத்திர தாக்கல் இறுதி நாளான 19 ஆம் திகதிக்குப் பின்னர் இவை பற்றிவிசாலமாகஅலசலாம்.

எல்லாவற்றிலும் அதி முக்கியமாக தமிழர் தரப்பு அரசியல் முருங்கை மரமேறி நிற்கிறது. வடக்கில் மூன்றுபிரதான அணிகளுடன் ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசிய கட்சியும் சில சுயேச்சைகளும் களம் இறங்குகின்றன. நியமன முதல் நாளான பன்னிரண்டாம் திகதியன்று இரு தரப்பினர் வேட்பு மனுக்களை யாழ். செயலகத்தில் தாக்கல் செய்துள்ளனர். ஒன்று, ஒருசுயேச்சைக்குழு, அடுத்தது ஜனசெத பெரமுன என்ற சிங்களக் கட்சி.

**வித்தியாதரன் முன்வைத்த கேள்விகளுக்கும் சவால்களுக்கும் சுமந்திரன் சரியாகப் பதிலளிக்க வில்லையென்பது கட்சியின் முக்கிய புள்ளிகளிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.**

நாவற்குழியில் பலாத்காரமாக அமர்த்தப்பட்ட சிங்கள குடியேற்றத்தைச் சேர்ந்தவர்கள் புடைசூழ பத்தரமுல்ல சீலரத்ன தேரர் இந்த வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இன்னும் எத்தனை சிங்களக் குழுக்கள் குடாநாட்டில் தரையிறங்குமோ தெரியாது.

கிழக்கின் நிலைமையும்கூட இவ்வாறுதான். தமிழர் அணிகளைவிட முஸ்லிம், சிங்கள அணிகள் இங்கு மோதவுள்ளன. ராவுப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸும், ரிஷாத் பதியுதீனின் மக்கள் கட்சியும் ஒன்றிணைந்து பொதுச் சின்னத்தில் போட்டியிட முன்வந்திருக்கின்றன எனவும் ஒரு தகவல்.



பிரதான சிங்களக் கட்சிகளும் இங்கு நிச்சயமாகப் போட்டியிடும்.

தமிழர்களின் தலைமை என்று கூறப்படும் கூட்



டமைப்பு ஓரளவுக்கு வேட்பாளர்களை முடிவு செய்துள்ளது. ஆனாலும் 18ஆம் திகதியன்றே பெயர் பட்டியலை வெளியிடுமாம்.

வேட்பாளர் தெரிவில் பிரச்சினை கூட்டமைப்புக்குத்தான். யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே எம்.பி.க்களாகவிருந்த மாவை சேனாதிராஜா, சிறிதரன், சரவணபவன், சுமந்திரன், சித்தார்த்தன் ஆகிய ஐவரும் மீண்டும் போட்டியிடுகின்றனர். ஏழு பேர் தெரிவாக வேண்டிய இம்மாவட்டத்துக்கு மொத்தம் பத்துப் பேரை கூட்டமைப்பு நியமிக்க வேண்டும்.

இம்முறைத் தேர்தலில் யாழ். மாவட்டத்திலிருந்து குறிப்பிட்டளவு பெண்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமென சுமந்திரன் தெரிவித்துள்ள கருத்து ஒரு விடயத்தை மறைபொருளாகக் கொண்டதெனச் சொல்லப்படுகிறது. இவர் கூறியுள்ளதுபோன்று தேர்தல் முடிவு வருமானால், கூட்டமைப்பின் மூன்று முன்னாள் எம்.பி.க்கள் தோற்கடிக்கப்பட வேண்டுமென சுமந்திரன் விரும்புகிறார் என்பது தெரிகிறது. அப்படியானால் அந்த மூவர் யார்?

இது மட்டுமன்றி அண்மைக்காலங்களில் சம்பந்தனும் சுமந்திரனும் சம்பந்தப்பட்ட மேலும் பல தகவல்கள் கசிந்து தமிழரசுக் கட்சியினரது எதிர்காலத்தை மட்டுமன்றி கூட்டமைப்பினரையும் அச் சுறுத்துவதாக அமைகின்றன.

திருமலை மாவட்டத்தில் தாம் இம்முறையும் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ள சம்பந்தன் (ஆமாம்! அவர் ஓய்வு பெறவில்லை), கனடாவிலிருந்து இறக்குமதியாகியுள்ளவரை வேட்பாளர் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இடவேண்டுமெனவும் கட்டளையிட்டுள்ளார். அந்தக் கனடா பிரமுகர் தேர்தலில் தோல்வியடைந்தால் அவரைத் தேசியப் பட்டியலில் முதலாவது எம்.பியாக்க வேண்டுமெனவும் பிறப்பித்துள்ள சண்டித்தன உத்தரவு கூட்டமைப்புக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படவிருந்த சட்டத்தரணி தவராசாவை தேசியப் பட்டியலிலிருந்து ஒதுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இன்னுமொரு சட்டத்தரணி கூட்டமைப்புக்குள் எம்.பியாகக் கூடாது என்பதில் சுமந்திரனுக்கு விருப்பம் இருப்பதால் தவராசாவை ஓரங்கட்டுவது இலகுவாக உள்ளது.

கடந்த 9 ஆம் திகதி சுன்னாகத்தில் இடம்பெற்ற தேர்தலையொட்டிய கேள்வி – பதில் கூட்டம் உள்வீட்டுச் சமாசாரம் பலவற்றை சந்திக்குக் கொண்டு வந்துள்ளது.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

பனங்காட்டான் - (கனி)

# கைக்குண்டு மீட்பு



வவுனியா, மார்ச் 18

வவுனியா மாமடு பகுதியில் நேற்றுக் காலை வெடிக்காத நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக மாமடுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா – மாமடு நெடுங்குளம் பகுதியில் வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த பொதுமகன் ஒருவர் வீதிக்கு அருகே வெடிக்காத நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று இருப்பதைக் கண்டுள்ளார். இதையடுத்து மாமடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் பொலிஸாரால் விடே அதிரடிப் படையினருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விடே அதிரடிப்படையினரின் உதவியுடன் கைக்குண்டை செயலிழப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர். (ஐ)

# யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு வணிகர் கழகத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

அனைத்து வர்த்தகர்கள் மருந்தக உரிமையாளர்கள் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் விநியோகஸ்தர்களுக்கான ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் எனக் குறிப்பிட்டு யாழ்ப்பாண வர்த்தக சங்கம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1. பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் மருந்து வகைகள் அரிசி வகைகள் மற்றும் ஏனைய பொருள்களை போதிய கையிருப்பில் வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2. பொதுமக்களுக்கான பொருள்களை எந்த சூழ்நிலையிலும் தட்டுப்பாடின்றி விநியோகிக்க தயார் நிலையில் இருக்கவேண்டும்.

3. கடந்த சில நாள்களாக தாங்கள் இரவு பகல் பாராது மக்களுக்கு பொருள்கள் விநியோகித்தமையையிட்டு நாங்கள் உங்களை பாராட்டுகிறோம், தொடர்ந்தும் இக்கட்டான நிலைகள் ஏற்படும் போது மக்களுக்கான சேவையை தொடர்ச்சியாக வழங்கவேண்டும்

4. வடமாகாணத்துக்கான அத்தியாவசியப்பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் விநியோகத்தில் தனியார் துறையினரே பெரும்பங்கை வகித்து வருகிறார்கள். அந்த வகையில் வடமாகாணத்தில் இருக்கும் மக்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் பாரிய பொறுப்பு எம்மிடமே உள்ளது. அந்தப் பொறுப்பை உணர்ந்து அவர்களுக்கான சேவையைத் திருப்திகரமான முறையில் நிறைவேற்றவேண்டும்.

5. எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தங்களிடம் இருக்கும் கையிருப்புக்களை எல்லோருக்கும் பகிர்ந்து வழங்கி உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

6. வர்த்தகர்கள் தங்களது வர்த்தக நடவடிக்கைகளுக்கு தங்காலிக களஞ்சிய வசதி தேவைப்படின் யாழ் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டால் அரசாங்க அதிபர் மூலமாக அரச களஞ்சியங்களைப் பெற்றுத்தர ஆவன செய்யப்படும்.

மேலே குறிப்பிட்ட பாரிய பொறுப்புக்களை சுமந்து நிற்கும் நீங்கள் வர்த்தக நிலையங்களிலும் தங்கள் வீடுகளிலும் சுகாதாரத்தைப் பேணுவதுடன் கொரோனா வைரஸிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள சுகாதார அமைச்சு வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக தண்ணீரில் சவர்க்காரமிட்டுக் கைகளை அடிக்கடி கழுவுதல் வேண்டும்.

இருமல் அல்லது தும்மல் ஏற்படும் போது உங்கள் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டையால் மூடுதல், உடல் நிலை சரியில்லாத நபர்களுடன் பழகுவதை தவிர்த்தல், மக்கள் கூடுதலாக ஒன்றுகூடும் இடங்களைத் தவிர்தல், கைகள் சுத்தமாக இல்லாவிட்டால் கண்கள் மூக்கு வாய் அல்லது முகத்தை தொடாதிருத்தல்.

ஒவ்வொரு நபரிடமிருந்தும் முடிந்தவரை ஒரு மீற்றர் தொலைவில் இருந்து உரையாடுதல் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க விற்றமின் சி, நோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் உணவு முறைகளைப் பின்பற்றுதல்.

ஏதாவது நோய் அறிகுறி இருப்பின் வைத்திய சாலையை உடன்நாடுதல் போன்ற ஆலோசனைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ - 07)

# சண்டித்தனமும் சர்வாதிகாரமும்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

1960 ஆம் ஆண்டுகால தேர்தல்களின்போது தமிழரசுக் கட்சி இவ்வாறான கேள்வி பதில் கூட்டங்களை நடத்துவது வழக்கம். அடலேறு எனப் பெயர் பெற்ற அட்வகேட் ஆலாலசுந்தரம் (பின்னர் சில காலம் எம்.பியாக இருந்தவர்) மட்டும் கேள்விகளுக் குப் பதிலளிப்பது போன்றது சுன்னாகம் கூட்டம்.

இக்கூட்டத்தில் தாறுமாறாக கேள்விகள் கேட்ட ஊடகவியலாளர் வித்தியாதரன் விசிறிய அம்புகள் தமிழரசுப் பிரமுகர்களை உலுப்பிவிட்டிருக்கின்றன. இவரது முக்கிய பாய்ச்சல்கள் மாவை சேனாதிராஜாவை நோக்கியவை. பதிலளிக்க அவர் அங்கிருக்கவில்லை.

வித்தியாதரன் முன்வைத்த கேள்விகளுக்கும் சவால்களுக்கும் சுமந்திரன் சரியாகப் பதிலளிக்கவில்லையென்பது கட்சியின் முக்கிய புள்ளிகளிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கட்சியின் உள்வீட்டு விடயங்களைப் பொது மேடையில் விமர்சித்திருக்கக் கூடாது என்ற தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் தமிழரசுக் கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான சி.வீ.கே.சிவஞானம்.

ஊடகவியலாளரைக் கட்சிக்காரராகப் பார்க்கக் கூடாதென்பதையும், எதனையும் சுடச்சுட கேள்வி யாகக் கேட்டே பழக்கப்பட்ட ஊடகவியலாளர் இப்படித்தான் கேள்விக்கணைகளைத் தொடுப்பார் என்பதையும் சி.வீ.கே.சிவஞானம் மறந்துவிட்டார்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவைத் தலைவராக இருந்து கொண்டு ஆளுநரிடம் கையளித்த சி.வீ.கே.சிவஞானம், அண்மையில் அதனைத் தவறென நேரடியாக ஒப்புக் கொள்ளாது தம்மை சூழ்நிலையின் கைதிபோல குறிப்பிட்டிருந்தார்.

இப்போதும் அதுதான்! மாவையர் மீதிருக்கும் விசுவாசத்தால் அவரைப் பிணையெடுக்க முன்வந்திருக்கிறார் போலும். மற்றவர்களைப் பிணையெடுத்தே பிரச்சினையில் அகப்பட்ட அனுபவம் இவருக்கு நிறையவே உண்டு.

இது போகட்டும். கூட்டமைப்பின் பட்டியலில் கிழக்கிலிருந்து ஒரு பெண்ணையும், யாழ்ப்பாணத்துக்கு இன்னொரு பெண்ணையும் தம்விருப்பப்படி சேர்க்க முனைந்து மூக்குடைபட்டு நிற்கிறார் சுமந்திரன். விடுதலைப் புலிகளுக்கு ஒரு கருணா போல தமிழரசுக் கட்சிக்கு ஒரு சுமந்திரனென்று தமிழரசுக் கட்சியின் மாதர் அணி அறிக்கை வாயிலாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

யார் என்ன சொன்னாலும், நானே பேச்சாளன் – நானே மந்திரி – நானே ஆலோசகன் – நானே எதிர்காலத் தலைவன் – நானே எல்லாம் என்ற மமதையில் சுமந்திரன் பயணிக்கிறார்.

சம்பந்தனின் உள்வீட்டுச் சண்டித்தனமும், சுமந்திரனின் சுத்துமாத்துச் சர்வாதிகாரமும் கூட்டமைப்பை மக்கள் மத்தியில் மதிப்பிறக்க வைத்துள்ளன.

இதனால் மாற்று அணியொன்றின் அவசியம் மக்களால் ஆழமாக வேண்டப்படுகிறது. அது, கொள்கை அடிப்படையிலா, பதவி அடிப்படையிலா, தலைமைத் தெரிவு அடிப்படையிலா என்று விளங்காத நிலையே இப்போது காணப்படுகிறது.

அடுத்த வாரம் இதுபற்றி விரிவாக நோக்குவோம்.

# மஹிந்த அமரவீரவின் மகன் தனிமைப்படுத்தப்பட்டார்!

கொழும்பு, மார்ச் 18

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்த அமைச்சர் மஹிந்த அமரவீரவின் மகன் பசன் அமரவீர தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை, தியத்தலாவையிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்திற்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை நேற்று பிற்பகல் 34 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்ட 11 ஆவது நபருக்கும் அவரது மனைவிக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் நிலைமையை மறைத்தமை மற்றும் அதற்கு உதவி ஒத்தாசை புரிந்தமை தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்கிஸை பதில், நீதிவான் சி.ஏ.தர்மதிலக முன்னிலையில், கல்கிஸைப் பொலிஸார் சார்பில் பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகரவினால் இந்த வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக நீதவானுக்கு தெளிவுப்படுத்தலும் பொலிஸ் தரப்பினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த விடயங்களை ஆராய்ந்த நீதவான், இதுதொடர்பாக விசாரணை செய்து எதிர் வரும் ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு முன்னர் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# வெளிநாடுகளிலிருந்து வந்த 6,000 பேர் கண்காணிப்பில்!

கொழும்பு, மார்ச் 18

இத்தாலி உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு பிரவேசித்த ஆறாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தமது அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் வீடுகளில் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்தாம் திகதிக்கு முன்னர் நாட்டுக்குள் பிரவேசித்த 2 ஆயிரத்து 572 பேர் மற்றும் மார்ச் 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை உத்தியோக பூர்வமாக நாட்டிற்குள் நுழைந்த மூவாயிரத்து 460 பேர் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர் என அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட பல பகுதிகள் மற்றும் தென் மாகாணத்தின் சில பகுதிகளில் வைரஸ் தொற்றக்கூடிய அவதானம் இருப்பதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தற்போது அடையாளம் கண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கொரோனா தடுப்பு மத்திய நிலையத்தின் தலைவராக இராணுவத் தளபதி நியமனம்

கொழும்பு, மார்ச் 18

கொரோனா வைரஸை (கொவிட் 19) தடுப்பதற்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவராக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலக்கம் 1090 ஸ்ரீ ஜயவர்தனபுர, இராஜகிரிய என்ற முகவரியில் கொரோனா வைரஸை (கொவிட் 19) தடுப்பதற்கான தேசிய மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் மிக வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இதுவரையில் 34 பேர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.



இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த தேசிய மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யானைகள் அட்டகாசம்



மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்திலுள்ள இரு நெல் விற்பனை நிலையங்களை காட்டு யானைகள் நேற்று அதிகாலை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளன.

இதன்போது, இரண்டு கடைகளும் பகுதியளவில் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகள் பலவற்றை காட்டு யானைகள் சாப்பிட்டு விட்டு வெளியில் வீசி எறிந்துள்ளன.

அந்தக் கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த குளிர்சாதனப் பெட்டியொன்றும் முழுமையாக சேதமாக்கப்பட்டுள்ளது.

## களுத்துறையில் விக்கிரபாகு!

கொழும்பு, மார்ச் 18

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு நவசமசமாஜக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி அக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன களுத்துறை மாவட்டத்திலும், மத்திய குழுசெயற்குழு உறுப்பினர்களான திருநாவுகரசு யாழ். மாவட்டத்திலும், மகேந்திரன் வன்னியிலும் போட்டியிடுகின்றனர்.

வேட்புமனுவிலும் இவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்திலும் மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களுக்காக குரல் எழுப்புவதற்கு எவரும் இல்லை. இது உட்பட மேலும் சில காரணிகளை கருத்திற்கொண்டே இங்கு போட்டியிடும் முடிவை எடுத்தேன். - என்று விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். (ஐ)

## கொரோனா வைரஸ் எதிரொலி; கோள் மண்டலத்துக்கும் பூட்டு

கொழும்பு, மார்ச் 18

கொழும்பில் அமைந்துள்ள கோள் மண்டலத்தை நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் பரவலைத் தடுக்கும் நோக்கிலேயே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் அருணு பிரபா பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், கோள் மண்டலத்தை மீண்டும் திறப்பதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# பொதுத் தேர்தலை அரசு ஒத்திவைக்க வேண்டும்

### கபே அமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினால் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலைப் பிற்போடுமாறு கபே அமைப்பு (சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்) தேர்தல் ஆணைக்குழுவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

கபே அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அச்ச சூழ்நிலையில் பொதுமக்கள் வெளியே செல்வதற்கே அஞ்சுகின்றனர்.

இந்நிலையில் தேர்தலை நடத்துவதென்பது அசாதாரண நிலைமையாகும். குறிப்பாக வேட்பு மனு தாக்கல் செய்யும்போது ஏற்படக்கூடிய விடயங்கள் மற்றும் அதன்பின்னர் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு சிக்கல்கள் காணப்படுகின்றமையினால் தேர்தல் நடவடிக்கைகளை பிற்போடுவது அவசியமாகும்.

மேலும் நிர்வாக சேவைகள் சிலவற்றை மாத்திரம் திறந்து தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாகும். சில நாடுகளில் நடைபெறக்கூடிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கூட பிற்போடுகின்ற நிலையில் இலங்கையில் தேர்தலை பிற்போடுவது குறித்து அரசாங்கம் எந்தவொரு அறிவிப்பையும் இதுவரை விடுக்கவில்லை.

மேலும் தேர்தலுக்கு முன்னர் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவது தான் தற்போதைய சூழ்நிலையில் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றமையினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## கொரோனா விழிப்புணர்வு தொடர்பில் ஊடகவியலாளர்கள் துண்டுப்பிரசுரம்





வவுனியா, மார்ச் 18

கொரனா தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களைப் பாதுகாப்பாக இருக்க வழிவகுக்கும் வகையில் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தால் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

கொரனா வைரஸ்சில் இருந்து எம்மை பாதுகாப்போம் எனத் தெரிவித்து நோய் தொற்றில் இருந்து விடுபட மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பான வழிமுறைகள் தொடர்பாக அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்துண்டு பிரசுரங்கள் ஊடகவியலாளர்களால் வவுனியாவின் ஆலயங்கள், புதிய பஸ் நிலையம், பழைய பஸ் நிலையம், ஓட்டோக்கள், பஸ்கள் என பல இடங்களிலும் பரவலாக விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)




வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் — இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2020 இல் வெளியிடப்பெற்றது.

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

## இன்று மாலை முதல்!




**தினசரி அச்சு இதழாக வெளியாகின்றது.**
**உங்கள் பிரதேச முகவர்களிடம்**
**பெற்றுக் கொள்ளுங்கள்!**

**சுடச்சுட அரசியல்,**
**தேர்தல் களச் செய்திகளுடன்...**

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

## தொடர்புகளுக்கு :- 021 222 3000